Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 09 வெள்ளிக்கிழமை (22.03.2013) பக்கங்கள் 20 ஓசை - 173


Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
TP - 0212225969
Hotline - 0212229497
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com













## தோற்றுப்போனவர்கள் தமிழ் மக்கள் அல்ல உலகுக்கு உணர்த்த ஒன்றுகூடுங்கள்

(யாழ்ப்பாணம்)

அரசியல் உரிமைப்போராட்டத்தில் எமது மக்கள் தோற்றுப் போனவர்கள் அல்ல என்பதை உலகுக்கு உணர்த்துவதற்காக எமது கட்சியின் தேசிய மாநாட்டில் ஒன்று கூடுமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையின் முழுவிபரம் வருமாறு, பாசமிகு, தோழர்கள், எம் இனிய உறவுகள் அனைவருக்கும் வணககம். அஸலாமு அழைக்கும், ஆயுபவான்.

தமிழ்பேசும் மக்களின் இலட்சிய கனவுகள் யாவும் ஈ.பி.டி.பி. யினராகிய எங்களது தோள்களின் மீதே இன்றும் சுமத்தப்பட்டுள்ளது. அரசியலுரிமை சுதந்திரத்தை அடைவதில் எமது மக்கள் தோற்றுப் போனவர்கள் அல்ல என்பதை நாமே மெய்ப்பித்துக் காட்ட வேண்டியவர்கள். எமது மக்களுக்காக நாம் எடுத்த தீர்மானமும், வகுத்த பாதையும் வெல்லப்பட்டே வருகிறது. இதுவே உண்மை. நாம் நடந்து வந்த பாதையில் கடந்து வந்த தடைகள் ஏராளம். அர்ப்பணங்களும், தியாகங்களும் அதைவிட அதிகம். சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளும், சேற்றைவாரி எம் மீது வீசும் தூற்றல்களும், தொடர்ந்துவரும் தடைக்கற்கள் ஆகும். ஆனாலும் அவைகளே எமக்கு படிக்கற்களும் ஆகும். எடுத்த பயணத்தை நடத்தியே முடிக்க, தொடர்ந்தும் நாம் நடக்க இன்னமும் உறுதிகொண்டு எழவேண்டும். இதுவரை எமது (19) ஆம் பக்கம் பார்க்க



# நிறைவேறியது தீர்மானம்

## பிரேரணைக்கு ஆதரவாக 25, எதிராக 13

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா முன்வைத்த பிரேரணை அதிகபடியான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் இப்பிரேரணை நியாயமற்றது என்றும் அனாவசியமானது என்றும் பதின்மூன்று நாடுகள் இப்பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் வாக்கெடுப்பின்போது எதிர்த்து வாக்களித்தன. ஐக்கிய நாடுகள் சபையின் மனித பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்காவினால கொண்டுவரப்பட்ட தீர்மானம் மீதான வாக்கெடுப்பின் பின்னர் நேற்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் மீதான வாக்கெடுப்பின்போது பிரேரணைக்கு ஆதரவாக 25 நாடுகள் வாக்களித்ததுடன் 13 நாடுகள் எதிராக வாக்களித்தன. அத்துடன், 8 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை. அமெரிக்காவின் இந்தத் தீர்மானத்தில் இந்தியா சில திருத்தங்களை முனவைத்த நிலையிலும், வாக்கெடுப்பின்போது இலங்கைக்கு எதிராக வாக்களித்தமை குறிபபிடத்தக்கது. 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை (19) ஆம் பக்கம் பார்க்க

## சவால்களைச் சந்திக்கத் தயார்



சர்வதேச ரீதியாக பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை எதிர்நோக்கத் தயார் என அரசாங்கப் பேச்சாளர் கெஹலிய ரம்புக் வெல்ல தெரிவித்துள்ளார். (19) ஆம் பக்கம் பார்க்க

## இருதய சிகிச்சைப் பிரிவு யாழ்ப்பாணத்தில் விரைவில்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவு 510 மில்லியன் ரூபா செலவில் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டிருக்கும் புதிய மூன்று மாடிக்கட்டடத்தில் அமை (19) ஆம் பக்கம் பார்க்க

## யாருக்கும் அடிபணியமாட்டோம் தூதரக வாயிலில் கோஷம்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால சமர்ப்பிக்கப்பட்டபிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்திற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது. தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்னால் இடம்பெற்றது.



கொள்ளுப்பிட்டி சந்தியில் இருந்து ஆரம்பமான இவ் ஆர்ப்பாட்டம் கொள்ளுப்பிட்டி காலி வீதியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகம் வரை சென்றுநிறைவடைந்தது. ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டோர் அமெரிக்காவின் தீர்மானங்கள் எமக்குத் தேவையில்லை, நவநீதம்பிள்ளை ஒரு பூனை", "இந்தியாவின் றோவும் அமெரிக்கா வின் சி.ஐ.ஏ.யும் இதற்கு பின்னணி", "நாம் யாருக்கும் அடிபணிய மாட்டோம்" போன்ற கோஷங்களை எழுப்பியவாறு அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்னால ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## வடக்கில் "நெல்சிப்" செயற்திட்டம்; நிதிவழங்க இப்போதும் தயார்

### திட்டத்தை மாற்ற எவரும் முயற்சிக்கவில்லை கூட்டமைப்பு எம்.பி.க்கு பதிலடி

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் "நெல்சிப்" திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டங்களுக்கு நிதி அமைச்சின் ஆலோசனைகளுக்கு இணங்க தேவையின் பிரகாரம் நிதியை விடுவிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் கேட்ட கேளவிக்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் எழுந்துமூலம் பதில் வழங்கும்போதே மேற் (19) ஆம் பக்கம் பார்க்க

## பணிக்கு திரும்பினார் டாக்டர் பவானந்தராசா

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சின் பணிப்புரையை அடுத்து சுகவீனவிடுப்பில் இருந்துவந்த யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா நேற்று பணிக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவ சங்கத்தினருடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து தாம் வைத்தியசாலை நிர்வாக நடவடிக்கைகளில் சுயமாக ஈடுபடமுடியவில்லை என்று சுகாதார (19) ஆம் பக்கம் பார்க்க

# யுத்தம் தின்ற கல்விச்சாலைகள்; புனரமைக்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தால் அழிவடைந்த பாடசாலைகளை முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அம்மாவட்டத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகர் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பாடசாலைகள் சேதமடைந்தன. இதில் 10 பாடசாலைகள் மிக மோசமாகச் சேதமடைந்ததாகவும் அவர் கூறினார்.

சேதமடைந்த பாடசாலைகளை முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இப்பாடசாலைகளின் புனரமைப்புப் பணிகளுக்காக தொண்டு நிறுவனங்களிடமும் உதவிகள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது இவ்வாறிருக்க, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையும் நீண்ட காலமாக நிலவிவருகின்றது. பிரதான பாடங்களான கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கு போதியளவான ஆசிரியர்கள் முல்லைத்தீவு மாவடடத்தில் இல்லையெனவும் முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் இம்மாதத் தொடக்கத்தில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் 34 ஆசிரியர்கள் தங்களது வலயத்திற்கு இடமாற்றப்பட்டனர். இவர்களில் 16 ஆசிரியர்கள் மாத்திரமே கடமையை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். ஏனைய 18 ஆசிரியர்களும் மீளவும் யாழ். மாவட்டத்தில் இடமாற்றம் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

# உறங்காமல் இயங்குமா வரணி வைத்தியசாலை?

(யாழ்ப்பாணம்)

வரணிப் பிரதேச வைத்தியசாலையானது வரணிப் பகுதியில் உள்ள 3132 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தும் பிரதான வைத்தியசாலையாகும். இவ்வைத்தியசாலையில் நிரந்தரமாக 2 வைத்தியர்களை நியமித்து 24 மணி நேரமும் வைத்தியசாலை செயற்பட நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையினை அண்மித்த பகுதி மக்கள் தமது வைத்திய சேவையினைப் பெறும் நோக்கில் 10 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மந்திகை ஆதார வைத்தியசாலைக்கும் அதே போன்று 13 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் செல்வதனால் பெருந்தொகைப் பணம் செலவாவதுடன் நேரமும் அதிகளவில் செலவிடப்படுகின்றது.

எனவே வரணிப் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தரமாக 2 வைத்தியர்களை நியமித்து 24 மணி நேரமும் வைத்தியசாலை செயற்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

## பதிவுகளை மேற்கொள்ள பணிப்பு

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 2011/2012 ஆம் ஆண்டிற்கான பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாத மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இசை, நடனம், சித்திரம், கலை, சட்டம் ஆகிய கற்கைநெறி மாணவர்கள் இன்றும், உயிரியல், பௌதீக விஞ்ஞானம், விஞ்ஞானம், கணனி விஞ்ஞான மாணவர்கள் நாளையும், வணிகம், முகாமைத்துவம் எதிர்வரும் திங்கட்கிழமையும், தாதியியல், விவசாயம், சித்தமருத்துவம், மருந்தாக்கவியல், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான மாணவர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமையும் பதிவினை மேற்கொள்ள முடியும்.

பதிவுகள் யாவும் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணி வரை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (54)

# முருகன் கோயிலில் விக்கிரகங்கள் திருட்டு

(திருநெல்வேலி)

தாவடி முருகன் கோயிலில் திருட்டு இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இத்திருட்டுச் சம்பவத்தில் கோயிலுக்குள் வைக்கப்பட்டிருந்த முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய ஐம்பொன்னிலான விக்கிரகங்களை திருடர்கள் திருடிச்சென்றுள்ளனர்.


கோயிலின் வெளிக்கதவுகள் எதுவும் உடைக்கப்படவோ அல்லது ஓடுகள் பிரிக்கப்பட்டதாகவோ அடையாளங்கள் எதுவும் இல்லை. மணிக்கோபுரத்தின் வாயிலாக திருடர்கள் கோயிலுக்குள் இறங்கிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. 2 வேல்கள் பிடுங்கப்பட்டு தரையில் வைக்கப்பட்டிருந்தன. கோயிலுக்குள் வேறு பெறுமதியான பொருட்கள் இருந்தும் அவை களவாடப்படவில்லை.

திருட்டுப்போன விக்கிரகங்கள் ஐம்பொன்னிலானவை என்பதுடன் மிகவும் ஒளிமயமானதும், அழகானதும் சக்திவாய்ந்ததுமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பல வருடங்களாக இக்கோயிலில் வைக்கப்பட்டிருந்த பக்திமயமான விக்கிரகங்களுமாகும் எனப் பூசகரினால் கூறப்பட்டுள்ளது.

இத்திருட்டுப் பற்றி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (137)

# வீதிக்கு விமோசனம் எப்போது கிடைக்கும்?




(யாழ்ப்பாணம்)

கொடிகாமம், பருத்தித்துறை வீதியானது வடமராட்சி, தென்மராட்சி பகுதி மக்களது மிகவும் முக்கியமான வீதியாகும். வடமராட்சியில் உள்ள மக்கள் வெளிமாவட்டங்களுக்கு செல்வதற்கு இவ்வீதியையே பயன்படுத்துகின்றனர்.

வடமராட்சியில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்களை வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கும் வெளிமாவட்டங்களிலிருந்து வடமராட்சிக்கு பொருட்களை கொண்டு வருவதற்கும் கொடிகாமம், பருத்தித்துறை வீதி மிகவும் முக்கியமான பாதையாக விளங்குகின்றது.

எனவே கொடிகாமம், பருத்தித்துறை வீதியினை காப்பெற் வீதியான அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# புனரமைப்புக் காண்கிறது யாழ். மணிக்கூட்டுக் கோபுரம்



(யாழ்ப்பாணம்)

இயங்காமல் இருந்த யாழ். மணிக்கூட்டுக் கோபுர புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

நீண்டகாலமாக சரியான நேரத்தை காட்ட மறுத்த மணிக்கூட்டுக் கோபுரம் சிறிது காலம் இயங்காமல் இருந்தது. இதுபற்றி பலவாறு பத்திரிகைகளில் பலமுறை செய்திகள் வெளிவந்த நிலையில் இதன் புனரமைப்புப் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

வர்ணப் பூச்சு மற்றும் சிறிய உடைவுகள் திருத்தம் என்பன இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அந்த சடலங்கள் அரச செலவில் அடக்கம்

உரிமை கோரப்படாமல் நீண்டகாலமாக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த 2 சடலங்கள் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்து உயிரிழந்த நிலையில் உறவினர்களால் இவ்விரு சடலங்களும் உரிமை கோரப்படாமல் இருந்தது. இது பற்றி 2 வாரங்களுக்கு முன்னர் பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாகியிருந்த நிலையிலும் உறவினர்களால் சடலம் பொறுப்பேற்கப்படாமையால் அவை இரண்டும் நேற்று மாலை அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

சுன்னாகம், கிளிநொச்சி போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களின் சடலங்களே இவ்வாறு அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

'எழுதுவோம் வாசிப்போம் உயர்வோம்', 'இலகுவழிச் சைவ நெறி' எனும் நூல்கள் வெளியீட்டு விழா சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் இன்று காலை 11.30 மணிக்கு அதிபர் வே.கந்தசாமி தலைமையில் வித்தியாலய சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ்மொழி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சின்னத்துரை கலந்துகொள்ளவுள்ளார்.

# விதை உற்பத்தி மும்முரம்

(பருத்தித்துறை)

யாழ். குடா விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் குடாநாட்டிலுள்ள விவசாயிகளுக்கு நல்லின விதைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கிணங்க யாழ். திருநெல்வேலியிலுள்ள பண்ணையில் தக்காளி, புடோல், பயிற்றை, பாகல், சிறகவரை ஆகிய நல்லின விதைகளை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

விவசாயிகள் அடுத்தமாத இறுதியில் யாழ். குடா விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்திடம் இருந்து நல்லின விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். குடா விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் ரி. ரவிமயூரன் அறிவித்துள்ளார். (01)

# முதலாம் தவணைப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் மாற்றம்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சை முடிவடைந்ததும் குழு நிலையில் பரீட்சை வினாத்தாள்களினைத் திருத்துவது என்ற முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே தீர்மானித்த குழு நிலை மதிப்பீட்டு முறை இரத்துச்செய்யப்பட்டு அதற்குப் பதிலான பாடசாலைகளிலே மதிப்பீட்டினை மேற்கொண்டு அவற்றின் புள்ளிப் பகுப்பாய்வினை 4 ஆம் திகதி வலயக் கல்வி அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டு1ள்ளார்.

மேலும் நாளை நடத்தப்படவிருந்த பரீட்சைகள் இடம்பெறமாட்டாது எனவும் அதற்குப் பதிலாக எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார். (42)

## யோகர்சுவாமிகள் குருபூசை விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் யோகர்சுவாமிகள் குருபூசை விழா நாளை காலை 10.00 மணிக்கு நவாலி கதிர்காம முருகன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'ஞானிகள்' எனும் விடயம் பற்றி சிறப்பு சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# உக்கிரமடையும் டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த மாதம் மட்டும் நேற்று வரை டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி 31 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினமும் இவ்வாறு இருபாலைப் பகுதியிலிருந்து ஒருவர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக அவ்வதிகாரி தெரிவித்தார்.

இவருடன் இந்த வருடம் இதுவரை 179 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 12153 வீடுகள் தேவையாகவுள்ளன

## பிரதேச செயலர் நாகேஸ்வரன்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் இன்னும் 12,153 வீடுகள் தேவைப்படுவதாக அப்பிரதேச செயலாளர் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் தெரிவித்தார்.

வீட்டுத்திட்டம் தொடர்பில் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதுதொடர்பாக தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக அழிவுகளையும் சேதங்களையும் சந்தித்த கிளிநொச்சி நகரை உள்ளடக்கிய கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் மொத்தமாக 22,343 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

இக்குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் ஆரம்பத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இவற்றுடன் அரை நிரந்தர வீடுகளும் அமைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதன் பின்னர் பல கட்டங்களாக முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள், சேதமடைந்த வீடுகளை மீள்நிர்மாணம் செய்தல் ஆகியவற்றினால் இதுவரையில் 10,190 வீடுகள் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்திய உதவியின் மூலம் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 655 வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் தவிர்த்தே மேற்படி வீடுகள் தேவையாக உள்ளதாகவும் கரைச்சி பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சியில் 4 ஆயிரம் பேருக்கு நிரந்தர காணிகள் வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் தெரிவித்தார்.

# ஆக்கபூர்வ பணிகளை மேற்கொள்ள சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்

## ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நாடுகளும், புலம்பெயர் உறவுகளும் இன்றைய யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு எமது தேசத்தில் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ள முன்வரவேண்டுமென்பதே அனைத்து தமிழ் பேசும் மக்களின் அவாவாகவுள்ளது என ஈ.பி.டி.பி. இன் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த 'தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இலங்கைக்கு எதிராக இந்தியா நடவடிக்கை எடுக்க முற்படுவதை எதிர்த்தும் கண்டனப் பேரணி யாழ். நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி. இன் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தலைமையிலான அரசு தயாராகவுள்ள இத்தருணத்தில் அழிவுயுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின் எமது தமிழ் பேசும் மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இத்துடன், எமது பிரதேசங்களுக்கான சகல அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழும் இவ்வேளையில் அநாவசியமற்ற ஐ.நா.வின் தீர்மானம் ஏற்றுக்கொள்ள முடியாதது. மீளவும் தமிழ் பேசும் சமூகத்திற்கு ஓர் நெருக்கடியான நிலைமைகளை தோற்றுவிப்பதே சர்வதேசத்தின் சூழ்ச்சியாகும்.

எனவே, சம்பந்தப்பட்ட சர்வதேச நாடுகளும், புலம்பெயர் உறவுகளும் இவ்யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு எமது தேசத்தில் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்பதே அனைத்து தமிழ் பேசும் மக்களின் அவாவாகவுள்ளது எனக் குறிப்பிட்டார்.

# மயான வீதியை புனரமைக்க கோரிக்கை

(வரணி)

வரணி மாசேரி ஜே/340 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கப்பத்தை மயானத்துக்குச் செல்லும் வீதி தற்போது மிகமோசமாக சேதமடைந்துள்ளது. இவ்வீதியூடாகச் செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக மணல் வீதியாக வும் காணப்படுவதாலும் மழை காலங்களில் வெள்ள நீர்தேங்கிக் காணப்படுவதால் மயானத்திற்கு இறந்தோரின் உடலை தகனத்திற்காகக் கொண்டு செல்வோர் வாகனத்தை வீதியில் நிறுத்திவிட்டு உடலை காவிக்கொண்டு செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, இப்பிரதேச மக்களின் போக்குவரத்துத் தேவையை கருத்தில் கொண்டு உரிமையாளர்கள் இப்பாதைய்யை புனரமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)



சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாதுள்ள சம்பில்துறை சில்லாலை வீதியிலுள்ள மதகு ஒன்று இடிந்த நிலையில் உள்ளது. (54)

# நிர்க்கதியான மாணவர்களுக்கு ஒஸ்மானியாக் கல்லூரியில் மாலைநேர இஸ்லாம் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் உயர்தர கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இஸ்லாம் பாடத்தை கற்பிப்பதற்கு கடந்த ஒரு வருடமாக இஸ்லாம் பாட ஆசிரியர் இல்லாத நிலையில், தன்னால் அப்பாடம் கற்பிக்கப்பட்டு வருவதாக யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் முபாறக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மாணவரின் விருப்பத் தெரிவான இந்தப் பாடத்தை கற்பிக்க ஆசிரியர் எவரும் இல்லாத நிலையில் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர், என்னுடனும் வலயக் கல்விப் பணிப்பாளருடனும் தொடர்புகொண்டார்.

ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியர் மௌலவி எம்.ஏ.பைசர் சில வாரங்கள் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இப்பாடத்தைக் கற்பித்த போதிலும் அதனைத் தொடர்ந்து செய்ய அவர் முன்வரவில்லை.

இந்த நிலையில் நிர்க்கதியான நிலையிலிருந்த மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த 28 ஆம் திகதி முதல் மேலதிக மாலை நேர வகுப்பாக ஒஸ்மானியாக் கல்லூரியில் இஸ்லாம் பாடம் கற்பிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சனசமூக நிலையம் நடத்தும் புத்தாண்டை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை சனசமூக நிலையம் மற்றும் விநாயகர் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 62 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இணைநது நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விழாவின் போட்டி நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இதன்படி எதிர்வரும் 22, 23, 24 ஆம் திகதிகளில் கரோல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன், பாடசாலை மாணவர்களுக்கிடையே பல்வேறு போட்டி நிகழ்வுகள், எழுத்துப் பரீட்சைகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

இதில் 5 வயதிற்கு கீழ் தேவாரம், தரம் 1 முதல் 5 வரை தேவாரம், திருக்குறள் மனனம் மற்றும் தரம் 6 முதல் 13 வரை பேச்சு, பொது அறிவு, கட்டுரை ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன், தரம் 13 இற்கு மேலும் இப்போட்டிகளே நடைபெறவுள்ளன.

மேலும் தேவாரம் , திருக்குறள் மனனம், பேச்சு ஆகிய போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி காலை 9.30 மணிக்கும் எழுத்துப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கும் இடம்பெறவிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(எஸ்.பி)

# பொதுக்கூட்டம்

(வேலணை)

வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரையில் இயங்கி வருகின்ற இந்து மயானம் மற்றும் அந்தியெட்டி ஆகியவற்றின் பரிபாலண சபையினது வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளன. (05)

# அளவுக்கு மீறிப் பயணிகளை ஏற்றும் நடத்துநர் மீது நடவடிக்கை அவசியம்

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றுச் செல்லும் பேருந்து நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கடந்த சில மாதங்களுக்கு முன்பு பொலிஸ் உயர் அதிகாரிகளால் கூறப்பட்டபோதும், அது இன்று உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனப் பயணிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் பேருந்துகள் பல ஒப்பீட்டளவில் சிறியதாக உள்ளது. ஆயினும் நடத்துநர்கள் பயணிகளை கூவி அழைத்து ஏற்றிக்கொள்கின்றார்கள்.

பேருந்துகளில் ஏறும வரை அன்பாக அழைக்கும் நடத்துநர்கள் பயணிகள் பேருந்தில் ஏறியதும், பின்னே செல்லுங்கள் என நிர்ப்பந்தப்படுத்துகின்றனர்.

இதனை எதிர்த்துக் கேட்பவர்களைப் 'பேருந்தை விட்டு இறங்கிச் செல்லுங்கள்' எனக் கூறுகின்றனர்.

இவ்வாறாகச்செல்லும் பேருந்துகளின் பக்கக் கண்ணாடிகள் சில திறக்க முடியாதபடி உள்ளன. இதனால் பயணிகள் சுவாசிக்க முடியாது அவஸ்தைப்படுகின்றனர். சன நெரிசலைப் பயன்படுத்தி பெண்களிடம் சேஷ்டைவிடும் ஆசாமிகளும் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இவை எவற்றையும் நடத்துநர்கள் கண்டு கொள்வதில்லை.

கடந்த திங்கட்கிழமை மாலை இவ்வாறாக அதிகளவான பயணிகளுடன் சென்ற 788 ஆம் இலக்க பேருந்தில் பயணித்த பெண் ஒருவர் மயக்கமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு செயற்படும் பேருந்து நடத்துநர்கள் மீது சம்பந்தப்பட்டவர்கள் ஏன் நடவடிக்கை எடுக்கப் பின்னடிக்கின்றனர் எனப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (54)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் தாய்ச்சங்க பிரதிநிதிகள் யாழ். வருகை

(வேலணை)

ஸ்ரீலங்கா பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தாய்ச்சங்கத்தின் தலைவரான ஆர்.எம்.வி.ஜே.ரணதுங்க மற்றும் அவருடன் இணைந்த குழுப் பிரதிநிதிகள் நாளை சனிக்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்கள்.

இவர்கள் அன்றையதினம் காலையில் 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலக மா.நாட்டு மணடபத்தில் ஓர் விசேட கூட்டமொன்றினை நடத்தவுள்ளதால் அன்றையதினம் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் இயங்கி வருகின்ற பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் அனைவரையும் பங்கு பற்றிக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து ஓய்வூதியர்களினது எதிர்கால நடவடிக்கைகள் பற்றி முக்கியமாக ஆராயப்படவுள்ளதாகவும், யாழ். மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தெரிவித்துள்ளார். (05)

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே. அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார், நீ அதை வென்று விடலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பாலும் வெள்ளை! கொக்கும் வெள்ளை!

ஜெனிவா மகாநாடு இலங்கைத் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையையும் கொண்டுவரப் போவதில்லை என்று நாம் படித்துப் படித்துச் சொல்லிவந்தோம். இருந்தபோதிலும் மக்களுக்கு மாய மானைக் காட்டி உசுப்பேற்றலில் வைத்திருக்கும் வாய்ப்பை விட்டுவிடக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களும் அவர்களது தேர்தல் வெற்றிக்குப் பாடுபடும் ஊடகங்களும் "அமெரிக்கா – இலங்கை மோதல், அவ்வளவுதான் இலங்கை அரசு!" என்றவிதமாக தொடர்ந்து வித்தை காட்டிக் கொண்டேயிருந்தார்கள்.

இப்போது, "இரண்டாவது முறையாகவும் ஜெனிவாவில் இந்தியா முதுகில் குத்திவிட்டது" என்று சுருதி இறங்கிய குரலிலாயினும், மக்களுக்கு வீராவேசம் புகட்டி எழுதுவதைத் தொடர்வதில் அவர்களுக்கு வெட்கம் வரவேயில்லை. எப்படி இத்தகைய பச்சை ஏமாற்றுக் கதைகளையெல்லாம் தொடர்ந்து கேட்டு மக்களும் அவர்கள் தாளத்திற்கு ஒப்ப அசைந்து நப்பாசைகளை வளர்த்துக் கொள்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

இந்தமுறை ஜெனிவா மகாநாட்டுக்காக தமிழ் ஊடகப்பரப்பில் நிகழ்ந்த கூத்துக்களையெல்லாம் பார்க்கும்போது, அடுத்த முறையும் இதே வீரவசனங்களுடன் கொடியேற்றம் நடத்தப்பட்டு, முடிவில் "மூன்றாவது முறையாகவும் இந்தியா முதுகில் குத்திவிட்டது – அமெரிக்கா சோரம்போய்விட்டது" என்ற தீர்த்தத் திருவிழாச் செய்தியுடன் உற்சவம் நடந்து முடிவதைக் காணநேரும் என்றுதான் தோன்றுகிறது.

இந்தமுறை நடந்த திருவிழாவில் 'ஹைலைட்டான' விஷயம் என்னவென்றால், ஜெனிவாவில் தமிழ்மக்களின் அபிலாசைக் கேற்ப ஒன்றுமே நடக்காமல் போவதற்கு நம் தமிழ்க் கூட்டமைப்பின் பத்திரிகை கண்டுபிடித்து மக்களுக்குச் சொல்லியிருக்கும் காரணம்தான். தமிழ்த் தலைமை எனக் காட்டிக் கொள்பவர்களினதும் அவர்களது ஊடகங்களினதும் 'அரசியல் ஞானம்' கண்டு புல்லரிக்காமல் இருக்க முடியவில்லை.

தமிழ்மக்களுக்கு அரசியல் வழிகாட்டிக் கொண்டிருக்கும் இந்த மகானுபவர்கள் 'ஆராய்ந்து' கண்டுபிடித்திருக்கும் அந்த அற்புத காரணம் இதுதான்: வட இந்தியர்களின் மரபணுவுக்கும் தென்னிலங்கைச் சிங்கள மக்களின் மரபணுவுக்கும் உள்ள ஒற்றுமைதான் ஜெனிவாவில் இலங்கையை வெற்றிபெற வைக்கிறது என்பதாகும். இவர்களுக்குச் சர்வதேச அரசியல் மட்டுமல்ல மரபணு விஞ்ஞானமும் தெரிந்திருக்கிறது என்பதை அறியும்போது, தமக்கு வாய்த்த தலைமையை எண்ணி மக்களுக்குப் புல்லரிக்காமல் என்ன செய்யும்?

நம்மை ஏமாற்றுவது இந்தியாவோ அமெரிக்காவோ அல்ல இவர்கள்தான் என்பதை தமிழ்மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேச நாடுகள் தங்களது தேவையை நன்கு திட்டமிட்டு அதற்கேற்ப வெகு தெளிவாகவே செயல்களையும் தீர்மானங்களையும் நகர்த்தி வருகின்றன. அவர்களது நிகழ்ச்சி நிரலில் அவர்கள் எந்த மாற்றத்தையும் எப்போதும் செய்துகொள்ளவில்லை; அதற்கு அவர்கள் தயாருமில்லை. எல்லாம் அதனதன்படியே நடக்கிறது.

சர்வதேசம் பற்றி நமது மக்களுக்கு இவர்கள் காட்டும் சித்திரம்தான், பார்வையற்றவனுக்கு பால் கொக்கைப் போலிருக்கும் என்று சொல்லிப் புரியவைக்கும் விளையாட்டாக இருக்கிறது. "காலம் கனிகிறது; சர்வதேசம் பிடியை இறுக்குகிறது; இந்த மார்ச்சுடன் இலங்கை முடிந்தது" என்கிற விதமாக குடுகுடுப்பை அடித்தே காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லாம் பொய்த்து விட்டாலும் அவர்கள் சோர்ந்துவிடப் போவதில்லை. அடுத்த மார்ச் இருக்கவே இருக்கிறது. மக்களும், ஏதாவதொரு அதிசயக் கொப்பை வளைத்து பிடிக்கத்தந்துவிடப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்புக்குள் தங்கள் தமிழீழக் கனவைப் பொத்தி வைத்திருக்கும் சுகத்திற்குப் பழக்கப்பட்டு விட்டதாகவே தெரிகிறது. இல்லையெனில், இப்படியுமா ஒரு சமூகம் வருடந்தவறாமல் ஏமாந்துகொண்டிருக்கும்? - ஆசிரியர்

# படகில் அவுஸ்ரேலியா செல்லாதீர்கள்

## வீடு, வீடாக துண்டுப்பிரசுர விநியோகம்

அவுஸ்ரேலியாவுக்கு படகு மூலம் செல்வதை தடுக்கும் வகையில் வவுனியாவில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இது தொடர்பில் சுவரொட்டிகள் மூலமாகவும் ஒலிபெருக்கிகள் மூலமாகவும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

படகில் அவுஸ்ரேலியாவுக்குச் செல்வதால் ஏற்படும் உயிர் ஆபத்துக்கள், பண விரயம், அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைகள், கொள்கை மாற்றத்திற்கான காரணங்களை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்கள் வவுனியாவில் நேற்று வீடு, வீடாகச் சென்று கொழும்பில் உள்ள அவுஸ்ரேலிய உயர்ஸ்தானி கராலயம் விநியோகித்து வருகின்றது.

இந்தத் துண்டுப்பிரசுரங்களில் உங்களது பணத்தை வீண் விரயமாக்கவோ அல்லது உயிரை ஆபத்தில் இட்டுச்செல்லவோ வேண்டாம் என்ற தலைப்பில் அவுஸ்ரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை அமைச்சர் பிரெண்டன் ஓ.கொணரின் செய்தியும் உள்ளடக்கப்பட்டுள்ளது

# ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்கு வவுனியாவில் இன்று பயிற்சிப்பட்டறை

வவுனியா தெற்கு வலயப் பாட்சாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் சேவைகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை இன்று நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலக முதன் நிலை மண்டபத்தில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் இப்பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறையில் ஆலோசனை வழிகாட்டல் நுட்பங்கள், அணுகுமுறைகள், தொழில் வழிகாட்டல் செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்தும் நுட்பங்கள், சிறுவர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள், கட்டிளமைப் பருவப் பிரச்சினைகளை கையாளுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சிப்பட்டறையில் வளவாளர்களாக வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவர் சி.சுதாகரன், வவுனியா தெற்குவலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆர்.சுபாஸ்கரன், தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி ந.க. கிறேனியர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சென்னைக்கான விசா தற்காலிகமாக நிறுத்தம்

சென்னைக்கான விசா தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைகள் காரணமாக இவ்வாறு சென்னைக்கு விசா வழங்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

யாத்திரைகளை மேற்கொள்வதற்காக சென்னைக்கு விசாக்களை வழங்கி வந்த பௌத்த சாசன அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது,

தற்போதைய நிலைமைகளில் மாற்றம் ஏற்படும் வரையில் விசா வழங்கப்படமாட்டாது என தெரிவித்துள்ளது.

சென்னை ஊடாக இலங்கையர்கள் பயணம் செய்வது ஆபத்தானது எனவும்,. இதனால் இவ்வாறான யாத்திரைகளுக்கு வேறு வழிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

# இராணுவத்திற்கு பெண்களை இணைக்க வவுனியா, மன்னாரில் நேர்முகத்தேர்வு

(மன்னார்)

மன்னாரில் இராணுவத்திற்கு பெண்களை சேர்த்துக்கொள்ளும் முகமாக நேர்முகத்தேர்வுகள் நடைபெற்றுவருகின்றன.

இது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் இராணுவத்தினரால் வெளியிடப்பட்டுள்ளன.

சிவில் நிர்வாகப் பணிகளுக்கு திறமையான யுவதிகளை இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையணிக்கு சேர்த்துக் கொள்ளும் முகமாகவே இந்த நேர்முகத்தேர்வுகள் நடைபெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், மன்னார் தள்ளாடி இராணுவ தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் இதற்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றது.

இதன்போது மன்னார், நானாடடான், அடம்பன், சன்னார் ,பெரியமடு, ஈச்சலவக்கை போன்ற கிராமங்களைச் சேர்ந்த சுமார் 20 யுவதிகள் இந்த நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டதாக மன்னார், தள்ளாடி இராணுவ தலைமைச் செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், மடு இராணுவ முகாமில் நேற்று நேர்முகத்தேர்வு நடைபெற்றது.

வவுனியா நகர இராணுவ முகாமில் இன்று காலை 8.00 மணியிலிருந்து 12.00 மணிவரையும் வவுனியா ஓமந்தை சோதனைச்சாவடியில் நாளை பிற்பகல் 2.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் இதற்கான நேர்முகத்தேர்வுகள் நடைபெறவுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த யுவதிகள் வசிக்கும் பிரதேசத்தில் கடமையாற்றுவதற்கும் சிவில் நிர்வாகப் பணிகளுக்கு திறமையான யுவதிகளை இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையணிக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் மாத சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் உட்பட மாதாந்தம் 35,000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகை வழங்கப்படும் உட்பட விடயங்கள் அந்த துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 25 இலட்சம் பணமோசடி யர்ழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

25 இலட்சம் ரூபா பண மோசடி செய்த நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக யாழ். விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் அதே இடத்தினைச் சேர்ந்த ஒருவரிடம் தனது சொந்தத் தேவைக்காக கைமாறாக குறித்த தொகை பணத்தினை வாங்கியுள்ளார்.

இவர் பல வருடமாகியும் பணத்தை திருப்பி கொடுக்காமையினால் பணத்தினைக் கொடுத்த நபர் யாழ். விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த நபரை பொலிஸார் கைது செய்து வீசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

## உபதபாலகம் இன்மையால் சேவையை பெறுவதில் சிரமம்

(தர்மபுரம்)

கண்டாவளை, பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த குமாரசாமிபுரம், பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், புன்னைநீராவி கல்லாறு உட்பட ஒன்பது கிராமங்களுக்கு பொதுவாக ஒரு உபதபால் நிலையத்தை நிறுவி உதவுமாறு அப்பகுதி பொது அமைப்புக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் நீண்ட தூரம் பிரயாணம் செய்தே தபால் சேவையை பெறவேண்டிய அவல நிலை உள்ளதாக தெரிவிக்கும் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர் இது தொடர்பாக சமாசமும் பிரதேச சிரேஷ்ட பிரஜைகள் குழுவினரும் இணைந்து மாவட்ட அரச அதிபருக்கும், பிரதேச செயலருக்கும், தபால் அத்தியட்சகருக்கும் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.(112)

# சர்வதேச அரசியலின் தந்திர வியூகங்களிற்குள் நாமாக போய்ச் சிக்குகிறோமா?

கோ.றுஷாங்கன்

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்க தீர்மான விவகாரம், இலங்கையைவிட இந்தியாமீதே அதிகளவு அழுத்தங்களைக் கொடுத்துள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் மீதான ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் புதிய உத்தியாக இது இப்போது கையாளப்படுகிறது.

ஜெனிவா மாநாடு அல்லது இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் தேர்தல் காலங்களை மையப்படுத்தி 2009இல் நடைபெற்ற போர்க்காலத்து நிகழ்வுகளில் சில காண்பியங்களை வைத்து சனல் 4 வெளியிடும் வீடியோக்கள் பெரும்பாலும் இந்தியாவை, குறிப்பாக தமிழ்நாட்டை இலக்கு வைத்தே வெளியிடப்படுவதைக் காண முடிகிறது.

கடந்த ஆண்டு ஜெனிவா மாநாட்டின்போதும் இந்த சனல் 4 வீடியோக்கள் தமிழகத்தின் வீதிகளிலேயே அதிகளவு வெளியிடப்பட்டன. இம்முறை, ஒரு படி மேலே போய் புதுடில்லி நாடாளுமன்றத்தில்தான் சனல் 4 முதன்முதலில் காட்சிப்படுத்தப்பட்டது.

இம்முறை சனல் 4 உணர்ச்சிகளை அதிகம் கிளறிவிடக்கூடியதாக பாலச்சந்திரன் என்ற பாலகனின் ஒளிப்படங்களை சூட்சுமமாகப் பயன்படுத்தியிருக்கிறது. இதன்மூலம், உணர்ச்சி அரசியலில் பெயர்போன தமிழகத்தை எதிர்பார்த்ததுபோலவே உசுப்பிவிடுவதில் அது வெற்றிகண்டிருக்கிறது.

தமிழகத்துடன் நின்றுவிடாமல், சனல் 4 காணொளியை புதுடில்லி நாடாளுமன்றத்திலும் வெளியிட்டதன் மூலம், இந்திய மத்திய அரசாங்கத்துக்கு கூடியளவு அழுத்தங்களை அது ஏற்படுத்தியுள்ளது. தொடர்ச்சியாக இந்தியப் நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் பிரதான இடத்தைப் பிடிக்கச் செய்ததில் சனல் 4 எதிர்பார்த்த வெற்றியை அடைந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.


சரி, ஈழத்தமிழர் விவகாரம் குறித்து வெளியிடப்பட்டிருக்கும் சனல் 4, அவ்வப்போது தம்வசமிருக்கும் அந்தப் பழைய யுத்தகாலக் கொடூரக் காட்சிகளை விதவிதமாகத் தொகுத்து இந்தியாவை இலக்கு வைத்து வெளியிட்டு வருவதன் நோக்கமென்ன?

ஈழத் தமிழர் அவலங்கள் இப்போது சர்வதேச அரசியலின் வேறு ஏதேதோ தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படத் தொடங்கியிருப்பதை இது காட்டுகிறது. ஈழத் தமிழர் பிரச்சினைக்கு பிரதான அடிப்படைக் காரணியாக அன்றுதொட்டு இருந்து வருகிற இந்து சமுத்திரப் பிராந்தியத்தை மையமாகக் கொண்ட சர்வதேச அரசியல் இராஜதந்திர நகர்வுகளின் ஒரு பகுதியாகவே சனல் 4 காணொளிகளையும், ஜெனிவா மாநாடுகளையும் நாம் பார்க்கவேண்டியுள்ளது.

**இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் மேற்குலகின் செல்வாக்குக்கு சவாலாக இருக்கக்கூடிய பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கும் ஒரு நெருக்கடியை கொடுக்கும் உத்தியாக 2013 ஜெனிவா தீர்மான காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு தமிழர்களின் உணர்வலைகளை உசுப்பிவிட்டு, அங்குள்ள அரசியல் தலைவர்களின் வாக்கு வங்கிகளை இலக்கு வைத்த செயற்பாடுகளின் மூலம், இந்திய மத்திய அரசுக்குப் பெரும் தலையிடி இம்முறை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காய்நகர்த்தல்கள் மூலம் ஜெனிவா தீர்மான புயல் அதன் நேரடி இலக்கான இலங்கை மீதாக அன்றி இந்தியாவில், குறிப்பாக புதுடில்லியிலேயே மையம் கொண்டிருக்கிறது.**

### பூகோள அரசியல்

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சர்வதேச நாடுகளின் பிரதான கப்பல் போக்குவரத்து மார்க்கத்தில்




கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இலங்கை மீது எப்போதுமே சர்வதேச நாடுகளுக்கு ஒரு கண் விழுந்தபடியே இருக்கிறது. காலனித்துவ காலகட்டங்களிலிருந்தே தொடர்ந்து வரும் இந்தப் பிரச்சினை, இந்திய சுதந்திரப் போரின் விளைவாக இலங்கையை விட்டும் பிரித்தானிய காலனித்துவ வாதிகள் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு மறைமுக வடிவங்களில் தொடர்ந்தது.

### கைகொடுத்த பிரித்தாளும் தந்திரம்

பிரித்தானிய அரசாங்கத்தின் பிரித்தாளும் தந்திரச் செயற்பாடுகளின் விளைவாக அவர்கள் எதிர்பார்த்த சிங்கள-தமிழ் இன முரண்பாடு கூர்மையடையத் தொடங்க, இந்த நிலைமைகளில் புதிய அத்தியாயங்கள் எழுதப்படத் தொடங்கின. மேற்குலகு எதிர்பார்த்தது போலவே உள்நாட்டு முரண்பாடு இலங்கைமீதான அவர்களின் பிடியைத் தொடர்ந்து பேண அவர்களுக்குக் கைகொடுத்தது. ஆனால், முரண்பாடு கூர்மையடைந்து ஆயுதப் போராட்டமாக விரிவடைந்தபோது புதிய சிக்கல்கள் தோன்றின.

ஜெயவர்த்தன காலத்து மேற்கு மைய வெளியுறவுக் கொள்கையினால் அதிகம் கவலையடைந்த இந்தியா, இந்த விடயத்தில் அவருக்கு கொடுத்த அழுத்தங்கள் எதிர்பார்த்த பயன்தராத நிலையில், ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் செயற்பாடுகளின் மூலம் ஜெயவர்த்தனவுக்கு தலையிடி கொடுக்கும் புதிய இராஜதந்திரத்தைக் கடைப்பிடித்தது. போட்டிக்கு, மேற்குலகும் விடாப்பிடியாக நேரடியாகவும், இஸ்ரேலிய மொசாட் போன்ற அமைப்புக்கள் மூலமும் ஜெயவர்த்தன அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்து வந்தது.

### சர்வதேச குரங்குகளின் கையில் இலங்கை அப்பம்

இப்படியாக, காலனித்துவ காலத்தில் பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் போடப்பட்ட இன முரண்பாட்டு வித்து வளர்ந்து விருட்சமாகி, முழு இலங்கைத் தீவின் நிம்மதியையும் சீர்குலைத்து, அது தன்னிறைவாக வளர்ந்துவிட முடியாத நிலையில் எப்போதுமே பல நாடுகளும் விரும்பிய விதமாக அதனைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய பல புதிய புதிய வாசல்களைத் திறந்து விட்டுக்கொண்டே இருந்தன. அண்மையில் ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்ததுபோல, இலங்கையர்களுக்குக் கிடைத்த சுதந்திர அப்பத்தை அவர்கள் தமக்குள் சரியாகப் பிரித்துக்கொள்ளத் தெரியாமல் சர்வதேச குரங்குகளிடம் இழந்துகொண்டே இருந்தனர்-இருக்கின்றனர்.

ஆனால், இந்துசமுத்திரப் பிராந்தியத்தை மையமாகக் கொண்ட சர்வதேச அரசியல் இராஜதந்திர நகர்வுகளின் எல்லைகளையும் தாண்டி, தமிழர்களின் ஆயுதப் போராட்டம் புதிய பரிமாணங்களின் வளர்ச்சி கண்டு, அது இந்துசமுத்திரப் பிராந்தியத்துக்கே அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பூமராங் ஆனபோது, சர்வதேச நாடுகள் பலவும் விழித்துக்கொண்டன. உடனே, ஆயுதப் போராட்டத்தின் தீவிரத்தைத் தணிக்கும் வகையிலான சமாதான முயற்சிகளை மேற்குலகின் செல்லப்பிள்ளையான நோர்வே மூலம் அவை முன்னகர்த்தின. ஆனால், அவற்றுக்கும் சவால் விட்டு ஆயுதப் போராட்டம் தொடர்ந்தபோது, ஏறத்தாழ அனைத்து சர்வதேச நாடுகளுமே இணைந்து இந்துசமுத்திரப் பிராந்தியத்தை அச்சுறுத்தும் அளவுக்கு வளர்ந்துவிட்ட ஆயுதப் போராட்டத்தை முற்றாகவே நசுக்கின.

### புதிய தந்திரம்

இப்போது போர் முடிந்து, தமிழர்கள் மத்தியில் ஆயுதப் போராட்ட வலு முற்றாக இல்லாமல் செய்யப்பட்டிருக்கும் சூழ்நிலையில், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் மீதான பிடியை இறுக்கிக்கொள்வதற்கு சர்வதேச நாடுகள் பலவும் முன்னெடுக்கும் புதிய அரசியல் இராஜதந்திர தந்திரோபாயமாகவே, போர்க்குற்ற விசாரணை, சனல் - 4 வெளியீடுகள், ஜெனிவா தீர்மானம் எல்லாம் அமைந்துள்ளன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் மீதான சர்வதேச நாடுகளின் பல்வேறு இராஜதந்திர நடவடிக்கைகளின் விளைவாக பூதாகரமான இலங்கை ஆயுத முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் ஏதோவொரு வகையில் நேரடி, மறைமுக பங்களிப்புக்களை வழங்கிய நாடுகளே இன்று இந்த ஜெனிவா வியூகத்தின் பின்னாலும் அணிவகுத்து நிற்கின்றன. இந்த ஜெனிவாத் தீர்மானத்துக்கான ஒரு அடிப்படையாக போர்க்குற்றங்களை முன்னிறுத்திக்கொண்டு, அதேவேளை, அதை முதன்மைப்படுத்தாத மாற்று வழிமுறைகளின் மூலம் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் மீதான தத்தமது பிடிகளை இறுக்கிக்கொள்ள ஒவ்வொரு நாடும் முனைவதை நாம் இப்போது அவதானிக்க முடிகிறது.

### பிசுபிசுக்கும் போர்க்குற்ற விசாரணை

இலங்கையின் போர் முடிவுக்கு வந்த பின்னர், இந்தப் போர் மேற்கொள்ளப்பட்ட விதம் குறித்த போர்க்குற்ற விசாரணைகளை ஐ.நா. மேற்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை முதலில் முன்வைக்கப்பட்டது. பின்னர், இதுகுறித்து விசாரித்து தமக்கு ஒரு பிரத்தியேக அறிக்கை சமர்ப்பிக்கவென ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் அமைத்த குழு, ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது.

ஆனால், பின்னர் சர்வதேச விசாரணைகளுக்கு அவசியமில்லை என்று கூறி இலங்கை உள்நாட்டில் அமைக்க முனைந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முயற்சிகளுக்கு அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் ஆதரவு வழங்கின. குறிப்பாக, இந்த ஆணைக்குழு முயற்சிக்கு தமது முழுமையான ஆதரவை அமெரிக்கா உத்தியோகபூர்வமாக வெளியிட்டும் இருந்தது.

போர்க்குற்ற விசாரணைகள் நேர்மையாக நடத்தப்பட்டால், புலிகள் இயக்கத்தை அழித்தொழிப்பதற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும், ஆயுத, பயிற்சி, புலனாய்வு உதவிகள் பலவற்றையும் வழங்கிய பல நாடுகளும் இந்த விசாரணையின் மூலம் அம்பலப்படக்கூடிய அபாயம் உள்ளதை சர்வதேச நாடுகள் பலவும் நன்கறியும். எனவேதான், பட்டும் படாமலும் போர்க்குற்ற விசாரணைகள் பற்றிப் பேசிப் பாவ்லா காட்டிக்கொண்டு, தமது நலன்களை இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நிலைநிறுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

போர்க்குற்ற விசாரணை என்கின்ற விடயத்தை இலங்கை அரசாங்கத்தின் மீதான ஒரு அழுத்தப் பிரயோக உத்தியாகக் கையாண்டபடி, நல் லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அமுல்படுத்துங்கள் என்ற கோரிக்கை ஜெனிவாத் தீர்மானம் மூலம் முன்னிறுத்தப்படுகின்றது.

### இந்தியாவே இலக்கு?

இன்னும் பார்த்தால், இந்துசமுத்திரப் பிராந்தியத்தை மையப்படுத்திய இந்த இராஜதந்திர நகர்வுகள் மூலம் இங்கே பலப்படுத்த முயற்சிக்கப்படுகின்ற மேற்குலகின் செல்வாக்குக்கு சவாலாக இருக்கக்கூடிய பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கும் ஒரு நெருக்கடியை கொடுக்கும் உத்தியாக 2013 ஜெனீவா தீர்மான காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு தமிழர்களின் உணர்வலைகளை உசுப்பிவிட்டு, அங்குள்ள அரசியல் தலைவர்களின் வாக்கு வங்கிகளை இலக்கு வைத்த செயற்பாடுகளின் மூலம், இந்திய மத்திய அரசுக்குப் பெரும் தலையிடி இம்முறை கொடுக்கப்பட்டுள்ளது.

(17ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியின் பாதுகாவலராக அப்பாவி மக்களே உள்ளனர்

(கொழும்பு)

அப்பாவி மக்களே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பாதுகாத்து வருவதாக சுகாதார அமைச்சரும், கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற சுகாதார அமைச்சின் நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அப்பாவி மக்களும், ஏழ்மையான மக்களுமே தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பாதுகாக்கின்றனர். மாறாக அதில் உள்ள அமைச்சர்களோ, உறுப்பினர்களோ இல்லை.

இந்த நிலையில் நாட்டில் உள்ள அப்பாவி மக்களை பாதுகாக்கும் பாரிய கடமை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்



# போர்க்குற்றத்திற்கான தண்டனை வடபகுதி மக்கள் பெறும் பயன் என்ன?

(கொழும்பு)

போர்க் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பதன் மூலம் வடக்கு மக்களுக்கு என்ன பயன் கிடைக்கும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த பிரத்தியேக நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு போர்க் குற்றப் பிரச்சினை கிடையாது. வேறு பிரச்சினைகளே அவர்களுக்குக் காணப்படுகின்றன.

வடக்கு - தமிழ் மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுக்க சர்வதேச சமூகத்தின் தலையீடு அவசியம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி வருகின்றது.

இதுவே அவர்களது நிகழ்ச்சி நிரலாக அமைந்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை கிடைக்கப் போகின்றது.

தமிழ் மக்களுக்கு எவ்வாறு தொழில் வாய்ப்புக்களை வழங்குவது என்பது குறித்தே கூட்டமைப்பு கவனம் செலுத்த வேண்டும்.

போர்க் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமென கூட்டமைப்பு கோரி வருகின்றது.

எனினும், தண்டனை விதிப்பதன் மூலம் தமிழ் மக்கள் எவ்வாறு நன்மை அடைவார்கள்.

வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தல், வீதி அபிவிருத்தி போன்ற பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகள், வடக்கின் பல குடும்பங்களைச் சேர்ந்தவர்களை பலவந்தமான முறையில் போரில் ஈடுபடுத்தியிருந்தனர்.

இதன் காரணமாக இவ்வாறான குடும்பங்களை பராமரிப்பதில் பெரும் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்களினால் வடக்கு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

இந்தப் பாதிப்புகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் எழுப்புவதில்லை

தமிழகத்துடன் எவ்விதமான தொடர்புகளையும் பேணப்போவதில்லை எதிர்காலத்தில் தமிழகத்துடன் எவ்வித தொடர்புகளையும் பேணும் திட்டமுமில்லை.

தமிழகத்தில் எமது இலங்கையர்களுக்கு பெரும் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எதிர்காலத்தில் தமிழகத்திலிருந்து வரும் தமிழர்களுக்கு சட்டங்களின் அடிப்படையில் உயர் தண்டனைகள் விதிக்கப்படும்.

மனிதநேயம் மற்றும் கருணை இல்லையென எங்கள் மீது புலிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

உண்மையில் மனித நேயமும், கருணையும் அவர்களிடம் கிடையாது.

எங்களது மனித நேயத்தினை அவர்கள் துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

பௌத்த பிக்குகளுக்கும், இலங்கையர்களுக்கும் எதிராக தாக்குதல்கள் நடாத்தும் தமிழக புலி ஆதரவாளர்களை கைது செய்ய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம் என மேலும் தெரிவித்துள்ளார்.

## மாலைதீவு பிரஜைகள் நாடுகடத்தப்படமாட்டார்

### அரசாங்கம் தெரிவிப்பு

இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள, மாலைதீவைச் சேர்ந்தவர்களை நாடுகடத்த வேண்டும் என்ற ஜாதிக ஹெல உறுமயவின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார். எனினும் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க நிராகரித்துள்ளார். இந்தக் கருத்து அமைச்சருடைய தனிப்பட்ட கருத்து. எனினும் இது அரசாங்கத்தின் நிலைப்பாடு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே இலங்கையில் இருந்து மாலைதீவைச் சேர்ந்தவர்கள் நாடுகடத்தப்படமாட்டார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## முஸ்லிம் சனத்தொகை வளர்ச்சி; தமிழரின் வளர்ச்சியில் வீழ்ச்சி


### புள்ளிவிபர திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு

இலங்கையில் முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சியினால் தமிழர்களின் சனத்தொகை வளர்ச்சி வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. எனினும் முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி சிங்களவர்களை பாதிக்கவில்லை என புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் இந்து பண்டார தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் சிங்களவர்கள் 74.9 வீதமாகும். 1981 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 74 வீதமாகக் காணப்பட்டது. எனவே சிங்களவர்களின் சனத்தொகை வளர்ச்சியில் மாற்றம் ஏற்படவில்லை. ஆனால் 1981 ஆம் ஆண்டில் 7 வீதமாக காணப்பட்ட முஸ்லிம் சனத்தொகை தற்போது 9.2 வீதமாக உயர்வடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் சனத்தொகை மாற்றம் சிங்கள மக்களின் சனத்தொகை மாற்றத்தில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை ஆனால், தமிழர்களின் சனத்தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1981 ஆம் ஆண்டு 12.7 வீத இலங்கைத் தமிழர்கள் 2011 ஆம் ஆண்டில் 11.2 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளனர். 55 வீதமாக இருந்த இந்திய வம்சாவளித் தமிழர்கள் 2011 ஆம் ஆண்டில் 4.2 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



2013 ஆம் ஆண்டின் "உலக நீர்" தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நீர் மாநாட்டையும், சர்வதேச "நீர்" கண்காட்சியையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் காலை அங்குரார்ப்பணம் செய்தார்.

இந்த நிகழ்வில் நீர்வள சபையின் ஊழியர்களின் ஒருநாள் ஊதியமான 3 மில்லியன் ரூபா சிறுநீரக நோயாளர்களின் சிகிச்சை நிதியத்துக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டதைக் காணலாம்.

## சர்வதேச மயப்படுத்தப்பட்ட பிரச்சினை அரசே பொறுப்புக்கூற வேண்டும்

### கூறுகிறார் விக்கிரமபாகு கருணாரட்ன



(கொழும்பு)

தமிழகத்தில் தேரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை நாம் கண்டிக்கின்றோம். அரசாங்கமே பிரச்சினையை சுட்டியுள்ளது. இந்து மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சாபத்தினாலேயே உலகிலேயே இந்துக்கள் பெரும் பான்மையாக வாழ்கின்ற இந்தியாவில். இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த சம்பவங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே பொறுப்புக்கூறவேண்டும் என்று புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முறையாக அமுல்படுத்தியிருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. தேசிய ரீதியில் தீர்த்துவைக்க வேண்டிய பிரச்சினை சர்வதேச பிரச்சினையாக மாறிவிட்டது. வடக்கில் நிலைமை மோசமானதாகும் படைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதுடன் ஜனநாயகம் அங்கில்லை. அரசியல்வாதிகள் மக்களுடன் வெளிப்படையாக பேசமுடியாது என்றார்.

ஜனாதிபதி, நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. அந்த தேர்தல்களில் எல்லாம் வடக்கு மக்கள் வாக்களித்தனர். ஆனால் பிரச்சினைக்கு ஓரளவிற்கேனும் தீர்வு காணுகின்ற வடமாகாண சபைக்கான தேர்தல் இன்னும் நடாத்தப்படவில்லை இதனை யாருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குரல் கொடுக்கின்றோம் என்று கூறிக்கொள்பவர்கள் தங்களுடைய ஆடைகளை களைய வேண்டும். வடக்கு-கிழக்கில் மட்டு மல்ல தெற்கிலும் எந்தவித மான அபிவிருத்திகளும் முன்னெடுக்கப்படுவதில்லை. அபிவிருத்தி எனும் பெயரில் நிதி கொள்ளையடிக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## தேசியப் பிரச்சினை கடல் கடக்க அரசாங்கமே முக்கிய காரணம்

### என்கிறார் சிறிதுங்க



தேசியப் பிரச்சினை கடல் கடந்து விட்டது இதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும். வடக்கில் ஜனநாயகம் இல்லை. இராணுவ ஆட்சியின் கீழ் வடக்கு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

வடக்கில் ஏ-9 வீதியை நிர்மாணித்ததனூடாக மட்டும் அந்த மக்களின் இதயங்களில் ஏற்பட்டுள்ள காயங்களை ஆற்றிவிட முடியாது என்று ஐக்கிய சோஷலிஸ கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் எனும் தொனிப்பொருளில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய ஆட்சி தீப் பிடித்துக் கொண்டிருக்கின்றது.

நாளைக்கு என்ன நடக்கும் என்று மன்மோகன் சிங் யோசித்துக் கொண்டிருக்கையில் அதில் இந்த அரசாங்கம் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றது என்று அவர் மேலும் கூறினார்.

பிரச்சினையை இந்தியாவிற்கோ, ஜெனிவாவிற்கோ இன்றேல் ஐரோப்பிய நாடுகளுக்கோ கொண்டுச்செல்வதற்கு விரும்பவில்லை. எனினும் அங்கெல்லாம் கொண்டு செல்லுமாறு அரசாங்கமே தள்ளிவிட்டுவிட்டது. இந்நிலையில் முஸ்லிம்கள் தங்களுடைய பிரச்சினைகளை மத்திய கிழக்கு நாடுகளுக்கு எடுத்துச்செல்வர் என்றும் அவர் கூறினார்.

# இடையூறுகளற்ற கல்வியின் மூலமே மாணவர்கள் உயர்வடையமுடியும்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கல்வியானது எந்தவகையிலும் பாதிக்காத வண்ணம் உயரவேண்டும். அதற்காக அவர்களுக்கான பாடவிதான செயற்பாடுகளுக்குத் தேவையான அனைத்து வளங்களும் எம்மால் வழங்கப்படும். என ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.




வடமாகாணத்திற்கென குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து சுமார் 60 இலட்சம் ரூபா செலவில் அமையப்பெற்ற வல்வெட்டித்துறை கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையின் விஞ்ஞான ஆய்வு கூடத்தினை நேற்று முன்தினம். பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களின் கல்வியானது எந்தவகையிலும் பாதிக்காத வண்ணம் உயரவேண்டும். ஆசிரியர்கள் கல்வியை கற்பிப்பதோடு பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் கல்விக்கான பாடங்களின் அடைவு மட்டங்களைக் கவனித்து வருவதுடன் அவர்கள் வீட்டில் கல்விகற்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக அதிபர் அவர்களால் முன்வைக்கப்பட்ட பல்லூடக தெறிகருவி மிக விரைவில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தினூடாக வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கரவெட்டி கரணவாய் மகாவித்தியாலயத்தில் வடமாகாணத்திற்கென குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து சுமார் 35 இலட்சம் ரூபா செலவில் அமையப்பெற்ற விஞ்ஞான ஆய்வு கூடத்தினையும் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் அன்றையதினம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில் வடமராட்சி பிரதேசசெயலர் ஜெயசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார், பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவரும், ஈ.பி.டி.பி.வடமராட்சி இணைப்பாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் உட்பட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய புதிய நிர்வாகசபைத் தெரிவு

(பருத்தித்துறை)

இலங்கை பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்கத்தின் தலைவராக யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன முன்னாள் பணிப்பாளர் கே.கதிரமலை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவ் ஓய்வூதிய நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்கக் கூட்டம் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர்.ரி. ஜெயசீலன், சிறப்பு விருந்தினர்களாக உதவிப்பிரதேச செயலாளர் திருமதி.உஷா சுபலிங்கம் கணக்காளர். கே.யோகேந்திரம், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் கலந்து கொண்டனர். தெரிவு செய்யப்பட்ட ஏனைய உறுப்பினர்கள்,

உப தலைவர் எஸ்.மாணிக்கதியாகராஜா, செயலாளர் எஸ்.சிவலிங்கம், உபசெயலாளர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம், பொருளாளர் எஸ்.ஸ்ரீ கண்ணன், கணக்காளர் எஸ்.கே.சற்குணம், செயற்குழு உறுப்பினர்களாக கே.சந்திரலிங்கம், கே.கணேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (01)

# கட்டாக்காலி மாடுகளால் விவசாயிகள் தொடர்பாதிப்பு

(வரணி)

வரணிப் பிரதேசத்தில் தற்போது நெல் அறுவடை முடிவுறும் நிலையில் விவசாயிகளால் அறுவடைசெய்யப்பட்ட நெற்கும்பிகள் வயல்வெளிகளில் வைக்கப்பட்டிருப்பதால் அவற்றை கட்டாக்காலி மாடுகள் நாசமாக்குவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரே தடவையில் அறுவடை செய்து நெல்லை மூட்டைகட்ட முடியாது. படிமுறையாகத்தான் இவற்றைச் செய்யவேண்டும் எனவும், ஆனால் அறுவடைசெய்து வயல்நிலங்களில் வைக்கப்படும் நெல்லை கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் மட்டுமின்றி மேய்சலுக்காக விடப்பட்டுள்ள மாடுகளும் இவற்றை நாசமாக்குவதால் தாம் எந்தப் பயனையும் அடையமுடியாது கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்தவருடம் பருவம் தவறிய மழையால் விவசாய நிலங்கள் பல அழிவடைந்தமையால் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளநிலையில் மேலும் கட்டாக்காலி மாடுகளால் தாம் முழுமையாக பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (150)

# மாடு முட்டியதில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தாவடிப்பகுதியில் மாடு முட்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் செல்வராசா ஜெயராசா (வயது 59) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி நபர், தோட்டத்தில் மேய்ச்சலுக்காக கட்டியிருந்த காளை மாட்டினை அவிழ்ப்பதற்காகச் சென்றபோது, காளை மாடு மூர்க்கமாக முட்டியதில் அவரது கழுத்துப் பகுதி காயமடைந்துள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (25)


## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

படித்து விட்டு தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் வகையில் 2 பதவி நிலைகளுக்கு Amana Takaful நிறுவனத்தின் யாழ். கிளை விண்ணப்பம் கோரியுள்ளது.

இதன்படி Filedstaf, Team Leaders ஆகிய பதவி நிலைகளுக்கே விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் இளைஞர், யுவதிகள் பதவி நிலைகள் தொடர்பான விபரங்களை 077 3440323, 077 5292501, 021 750 1100 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொய்யுள்



மூலபாரதி

## சின்னத்தனம்!

கருணா நிதிகலக் கின்றார் மீண்டும்
கட்சிக் காரரை விலக்கப் போவதாய்!
தருணம் தன்னில் தமிழரைக் காக்கா
தப்பிலி நாடகம் போட்டுவிட்டே!

வாங்கிய கோடிகள் கரைந்து போச்சா
வாழ்வது இலங்கை தமிழர்க ளில்லை!
ஆங்கவர் துரும்புக் காய்கள் தானே
ஆகட்டும் கலைஞர் ஆனந்தக் கூத்தே!

இந்தியா விலைக்கு இவரை வாங்கும்
இதற்குப் பிறகும் உண்ணா நோன்பு!
சிந்தியா திருக்க செய்வார் போலும்
சின்னத் தனத்து சிகரம் கருணா?

# முரசின் இன்றைய பலன்

(22.03.2013 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி 09 ஆம் திகதி. நட்சத்திரம் பூசம். முழுவதும். திதி தசமி. பிற்பகல் 03.02 வரை. இராகுகாலம் 10.46 - 12.16 வரை. சுபநேரம் 06.16 - 07.46 வரை. மரணம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நல்லதை செய்தும், கெட்டபெயர் வரலாம். பொறுமை காக்கும். கடின உழைப்பு. தொழில் சீராகும். பணத் தேவை அதிகரிக்கும். குடும்பத்தில் ஒற்றுமை முக்கிய தேவையாகும். |
| ரிஷபம் | எதிர்கால சிந்தனை. நற்செயல்களுக்கு பாராட்டு வரும். நண்பர்களோடு நெகிழும் தருணம். தொழில், இடையூறு சரி செய்வீர்கள். அளவான பணவரவு. மருத்துவ சிகிச்சை. |
| மிதுனம் | மதிநுட்ப செயற்பாடு. தொழில், இலக்கு நிறைவேறும். ஆதாய வருமானம். அரசு சார்ந்த உதவி. வாகன, வீடு மாற்றம். புதிய பொருள் வாங்குவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| கடகம் | புதிய சாதனை நிகழ்த்துகிற எண்ணம். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். நண்பர் உதவி. தொழில், சிறந்து வாழ்க்கைத்தரம் உயரும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி. |
| சிம்மம் | உங்கள் பேச்சு, சிலரை விலக்கலாம். சொந்த வேலையில் கவனம் நல்லது. தொழில், சராசரி. வேறு வகைகளிலும் வரவு இருக்கும். மாணவர்கள் தேர்ச்சி. வெளியூர் நற்செய்தி. |
| கன்னி | முன்யோசனையுடன் நடப்பது நல்லது. தொழில், குளறுபடி சரிசெய்வது அவசியம். அளவான பணவரவு. உடல்நலனுக்கு உணவில் கவனம். வாகனத்தில் மிதவேகம் நல்லது. |
| துலாம் | நினைத்த செயல் நிறைவேற தாமதமாகலாம். நண்பர், உறவினர்களிடம் கருத்து வேறுபாடு. தொழில், புதிய திட்டமிடுகை. புதிய செலவுகள் வரும். பாதுகாப்பில் கவனம். |
| விருச்சிகம் | கருணைக் குணம். சமூகத்தில் அந்தஸ்து. திட்டமிட்ட உழைப்பினால் தொழில், வளர்ச்சி. பணவரவும், நன்மையும். இல்லறத்துணை விரும்பியது செய்வீர்கள். புகழ். |
| தனுசு | நல்ல ஆலோசனை கிடைக்கும். வெகுநாள் பிரச்சினை தீரும். தொழில், சிறக்கும். தாராள பணவரவு. உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு, வெகுமதி. பிள்ளைகளால் பெருமை. |
| மகரம் | எண்ணம், செயலில் உற்சாகம். குடும்பத்தினரால், பெருமிதம். தொழில், அபரிமிதமான வளர்ச்சி. தாராள பணவரவு. விரும்பியதை வாங்குவீர்கள். குடும்பத்துடன் வழிபாடு. மகிழ்ச்சி. |
| கும்பம் | மனதில் அன்பு எண்ணம், நற்செயல்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை. தொழில் செழிப்பு. சராசரி பணவரவு. கடன் திரும்பும். இல்லறத்துணை, பிள்ளைகள் அன்பில் மகிழ்வீர்கள். |
| மீனம் | மனதில் இனம்புரியாத குழப்பம். நல்லோரின் ஆலோசனை உதவும். தொழிலில், அதிக பணி. செலவுக்குத் தக்க பணம் வரும். தந்தையின் நினைவு. அரச வழியில் உதவி. பக்தி. |

# மிகப் பெரிய கௌரவம்

சச்சின் டெண்டுல்கர் எனது பெயரை கப்டனாக பரிந்துரை செய்ததை (2007ஆம் ஆண்டு), எனது நேர்மைக்கு கிடைத்த பிரதிபலனாக நினைக்கிறேன். அவர் என்னைப் பற்றி என்ன நினைக்கலாம் என்றால், வித்தியாசமான சூழ்நிலைகளிலும், அணியின் யுக்தியை வகுப்பதிலும் நான் மிக விரைவாக கற்றுக்கொண்டு இருக்கிறேன் என்பதைத் தான். நான் கப்டன் ஆகாவிட்டாலும் கூட, அவர் எனது பெயரை கப்டனுக்கு பரிந்துரை செய்ததையே பெரிய கௌரவமாக கருதியிருப்பேன் என இந்திய கப்டன் டோனி தெரிவித்தார்.இந்த நூற்றாண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் டெண்டுல்கர் என்ற பெயரில் சச்சின் டெண்டுல்கர் பற்றிய புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இந்த புத்தக வெளியீட்டு விழா டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்திய கப்டன் டோனி கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், விளையாட்டு உலகில் எனது ஹீரோ டெண்டுல்கர் தான். கிரிக்கெட்டுக்கு வெளியே அவரது புகழ் காரணமாக, அவரிடம் பேசுவதற்கு எனக்கு இன்னும் கூட தயக்கம் இருக்கிறது. ஆனால் கிரிக்கெட் களம் என்று வரும் போது, எப்போதும் அணியின் யுக்திக்கு ஏற்றாற்போல் நான் நேர்மையாக நடந்து கொள்வேன். அணியின் வியூகங்கள் பற்றி ஆட்டத்தின் போது நானும், டெண்டுல்கரும் விவாதிப்பது வழக்கம். இதில் அவர் சமாதானப்படுத்தினால் கூட, சில சமயம் அவரது முடிவை நான் ஏற்றுக்கொள்ளாமல் போனது உண்டு. இது அடிக்கடி நடந்து இருக்கிறது. டெண்டுல்கரை முதல் முறையாக 10 ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்தேன். 2001,02ஆம் ஆண்டு சீசனில் புனேயில் துலீப் கோப்பை கிரிக்கெட் போட்டி நடந்தது. நான் கிழக்கு மண்டல அணியில் இடம் பெற்று இருந்தேன். அந்த ஆட்டத்தின் போது, நான் வீரர்களுக்கு கூல்டிரிங்ஸ் எடுத்துச் சென்று வந்தேன். இந்தப் போட்டியில் டெண்டுல்கர் 199 ஓட்டங்கள் எடுத்தார். அவர் ஆடிக் கொண்டிருந்த போது, நான் எனது அணியின் சக வீரர்களுக்கு கூல்டிரிங்ஸ், தண்ணீர் போர்த்தல்களை எடுத்துச் சென்றேன். அப்போது டெண்டுல்கர் திடீரென என்னைப் பார்த்து, எனக்கும் கூல்டிரிங்ஸ் கிடைக்குமா? என்று கேட்டார். அது தான் எனது ஹீரோவான டெண்டுல்கரை நான் முதல்முறையாக சந்தித்தது. அவர் கேட்டதும் எனக்கு எந்த வார்த்தையும் வரவில்லை. முடிவில் அவருக்கு ஒரு குளிர்பானத்தை வழங்கினேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுருண்டது சிம்பாப்வே



(டொமினிக்கா)

ஷேன் ஷிலிங்பேர்ட் சுழற்பந்து வீச்சினால் சிம்பாப்வே அணி முதல் இனிங்ஸில் சுருண்டுள்ளது. மேற்கிந்தியத்தீவு, சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி மேற்கிந்தியத்தீவின் டொமினிக்காவில் நடைபெற்று வருகின்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய சிம்பாப்வே அணி, ஷேன் ஷிலிங்பேர்ட்டின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறியதுடன், மளமளவென விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இறுதியில் சிம்பாப்வே அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித்தலைவர் பிரெண்டன் டெய்லர் 33, வியூசி சிபண்டா 32, சியன் வில்லியம்ஸ் 31 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஷேன் ஷிலிங்பேர்ட் 59 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, மார்லன் சாமுவேல்ஸ் மூன்று, ஷனொன் கப்றியல் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். தொடர்ந்து முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, கிறிஸ் கெய்லின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் ஓட்டங்களைக் குவித்து வருகின்றது. இறுதியில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கிறிஸ் கெய்ல் 61, சாமுவேல்ஸ் 26 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 79 ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் காதல் வலையில்



(நியூயோர்க்)


கோல்ப் ஜாம்பவான் டைகர் வுட்ஸ் மீண்டும் காதல் வலையில் சிக்கியுள்ளார்.

கோல்ப் விளையாட்டில் கொடிகட்டிப் பறக்கும் அமெரிக்க ஜாம்பவான் டைகர் வுட்ஸ்க்கு அவரது சொந்த வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையவில்லை. 10இற்கும் மேற்பட்ட பெண்களுடன் தனக்கு தொடர்பு இருந்ததை டைகர் வுட்ஸ் ஒப்புக் கொண்டதை தொடர்ந்து அவரது மனைவி எலின் நார்டிக்ரன் (சுவீடன்) கடந்த 2010ஆம் ஆண்டு விவாகரத்துப் பெற்றார்.

சில மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் கோல்ப்பில் கவனம் செலுத்திய டைகர் வுட்ஸ் மறுபடியும் காதல் வலையில் விழுந்துள்ளார். அவரது புதிய காதலியின் பெயர் லின்ட்சே வோன். அமெரிக்காவைச் சேர்ந்த இவரும் விவாகரத்துப் பெற்றவர்தான். 28 வயதான லின்ட்சே, பனிச்சறுக்கு விளையாட்டு வீராங்கனை. குளிர்கால ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றிருக்கிறார்.சில மாதங்களாக இருவரும் ஒன்றாக பல இடங்களில் ஜாலியாக வலம் வந்தனர். ஆனால் இப்போது தான் முதல் முறையாக தங்களுக்குள் உள்ள தொடர்பை ஒப்புக் கொண்டுள்ளனர்.

எனக்கும், லின்ட்சேவுக்கும் இடையே நட்பு ஏற்பட்டு, நெருக்கமாக பழகி வருகிறோம். எங்களுக்குள் உள்ள உறவைத் தொடர விரும்புகிறோம் என டைகர் வுட்ஸ் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# சோபிக்க முடியவில்லை



கழக அணிக்காக சிறப்பாக விளையாடும் நான், தேசிய அணியான ஆர்ஜென்ரீனாவுக்காக அசத்த முடியவில்லை என்பது உண்மை தான் என மெஸ்சி தெரிவித்தார்.

ஆர்ஜென்ரீன கால்பந்தாட்ட அணி வீரர் மெஸ்சி பாசிலோனா கழக அணிக்காக சிறப்பான திறமையை வெளிப்படுத்தி வருகின்றார். இவர், 2006, 2010 உலக கோப்பை கால்பந்தாட்டப் போட்டிகளில், தேசிய அணிக்காக எதிர்பார்த்தபடி திறமையை வெளிப்படுத்தவில்லை.

இது குறித்து கருத்துக் கேட்டபோதே மெஸ்சி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2006 உலக கோப்பை தொடரில் ஆர்ஜென்ரீன அணி சிறப்பாக விளையாடியது. கடைசியில் ஜேர்மனியுடனான போட்டியில் பனால்டியில் தான் தோற்றது.

2010 இலும் அதுபோலத்தான் நடந்தது. இந்த உலகக் கோப்பை போட்டிகளில் நான் சிறப்பாக விளையாடவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இதற்காக என்னை மட்டும் குற்றம் சொல்வது தவறு ஒட்டுமொத்த அணியும் ஏமாற்றியது என்பது தான் உண்மை.

ஆனால் மக்களும், ஊடகமும் நான் மட்டும் தனியாளாகப் போராடி கோப்பை வென்று தர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். ஆனால் இது முடியாத காரியம் அடுத்த தொடரில் முடிந்தவரை சிறப்பாக விளையாட முயற்சிப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சாதனை படைக்க உறுதி



(மயாமி)

அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் மயாமியில் நடக்கும் சோனி ஒப்பன் ரென்னிஸ் தொடரில், ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா சாதனை படைக்கும் உறுதியுடன் களமிறங்கவுள்ளார். கடந்த வாரம் நடந்த இண்டியன் வெல்ஸ் தொடரில் பட்டம் வென்ற அவர்,மயாமியிலும் கோப்பையை வெல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. மகளிர்ரென்னிஸ் டபுள்யு.டி.ஏ வரலாற்றில் இந்த 2 தொடரிலும் அடுத்தடுத்து பட்டம் வென்ற சாதனையை இதுவரை 2 வீராங்கனைகள் மட்டுமே நிகழ்த்தியுள்ளனர். ஸ்டெபி கிராப் 1994 மற்றும் 1996இலும், கி[illegible] கிளிஸ்டர்ஸ் 2005இலும் இண்டிய[illegible] வெல்ஸ் மற்றும் மயாமி தொடர்களில் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

2006ஆம் ஆண்டு இண்டியன் வெல்ஸ் போட்டியில் பட்டம் வென்ற ஷரபோவா, மயாமி தொடர் இறுதிப் போட்டியில் தோற்றது குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் நடந்த முதல் சுற்று ஆட்டங்களில் பிளாவியா பென்னட்டா (இத்தாலி), கிமிகோ டேட் கிரம் (ஜப்பான்), பெட்கோவிக் (ஜெர்மனி) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

முன்னணி வீராங்கனைகளான செரீனா வில்லியம்ஸ், ஷரபோவா, வோஸ்னியாக்கி, நாலி, அனா இவானோவிக், மரியா கிரிலென்கோ, குவித்தோவா ஆகியோர் நேரடியாக 2ஆவது சுற்றில் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசேட தூதுவரின் பணிகள் ஆரம்பம்



சீன கால்பந்தாட்டத்தை மேம்படுத்துவதற்கான விசேட தூதுவர் பணிகளை இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் டேவிட் பெக்காம் ஆரம்பித்துள்ளார்.

37 வயதான டேவிட் பெக்காம் இந்த மாத ஆரம்பத்தில் சீன கால்பந்தாட்ட தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

நடுவர்கள், அதிகாரிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் தடைகளை எதிர்நோக்கக் காரணமான ஆட்ட நிர்ணயத்தில் இருந்து மீட்சி பெறும் நோக்குடன் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம் சீனாவின் லீக் போட்டிகளில் பெக்காம் பங்குபற்றவுள்ளதுடன்,சிறுவர்களிடையே கால்பந்தாட்டத்தை ஊக்குவிக்க சிறுவர் கழகங்களுக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார்.

# பிரட்மனை நினைவூட்டிய தவான்

(புதுடில்லி)

மொகாலி டெஸ்டில் அறிமுக வீரர் தவானின் ஆட்டம், முன்னாள் நட்சத்திரம் டொன் பிரட்மனின் ஆட்டத்தை நினைவுபடுத்துவதாக இருந்தது என்று ஆஸி. அணி வீரர் எட் கோவன் கூறியுள்ளார்.

தவான் விளையாடிய விதம் பிரட்மனைப் போலவே இருந்தது. சர்வதேச போட்டிகளில் நான் பார்த்த மிகச் சிறந்த இனிங்ஸில் இதுவும் ஒன்று. முதல் டெஸ்டிலேயே அற்புதமாக விளையாடி அசத்திவிட்டார். கண்டபடி அடிக்காமல் ஒவ்வொரு பந்தின் தன்மைக்கு ஏற்பவே அவரது ஷொட் அமைந்திருந்தது.

எல்லாத் துடுப்பாட்ட வீரர்களுக்கும் சில நாட்களில் ஆட்டம் மிக அற்புதமாக அமைந்துவிடும். அப்படி ஒரு அதிர்ஷ்ட நாளாக தவானுக்கு அது அமைந்துவிட்டது. டில்லி டெஸ்டில் கப்டன் கிளார்க் விளையாடுவாரா என்பது பற்றி என்னால் எதுவும் சொல்ல முடியாது. அவர் ஏற்கனவே பல முறை வலியை பொறுத்துக் கொண்டு விளையாடி உள்ளார். நடப்பு தொடரில் எங்கள் ஆட்டம் ஏமாற்றம் அளித்தாலும், இளம் வீரர்களுக்கு நல்ல அனுபவம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் மீண்டும் இங்கு (இந்தியா) வந்து விளையாடும்போது, இந்த அனுபவம் அவர்களுக்கு நிச்சயம் உதவும். ஆடுகளங்கள் பற்றிக் குறை சொல்ல எதுவுமில்லை. துடுப்பாட்டத்திற்குச் சம அளவு ஒத்துழைத்த ஆடுகளங்களில், நாங்கள் பெரிய ஓட்ட எண்ணிக்கையைப் பெறத் தவறிவிட்டோம். அதே சமயம் இந்திய வீரர்கள் சதம், இரட்டைச் சதம் என்று விளாசி எங்களுக்கு நெருக்கடி கொடுத்துவிட்டனர். புவனேஷ்வர் குமாரின் பந்துவீச்சு அபாரமாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# நிராகரிப்பு

(சிட்னி)

மீண்டும் அணிக்குத் திரும்புமாறு பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் விடுத்த வேண்டுகோளை மைக் ஹஸி நிராகரித்துள்ளார்.

பயிற்சியாளர் மிக்கி ஆர்தரின் அழைப்புக் குறித்து மைக் ஹஸி கருத்துத் தெரிவிக்கையில், இது அதிகப்படியான புகழ்ச்சியாகும். ஆனால் இந்த நெருக்கடியான சூழ்நிலையில், குறிப்பாக ஆஷஸ் தொடரை எதிர்கொள்ள இருக்கும் இந்த தருணத்தில் நான் மீண்டும் அணிக்குத் திரும்ப விரும்பவில்லை. இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து 3 டெஸ்டில் அவுஸ்ரேலிய அணி தோல்வி கண்டிருப்பதால் எல்லா வீரர்களும் நிச்சயம் கவலையில் இருப்பார்கள்.

நான் வரும் குளிர்காலத்தை எதிர்நோக்கி இருக்கிறேன். அணியினருடன் ஒவ்வொரு நாளும் விடுதி, விமான நிலையம் என்று அலைவதை விடுத்து, குடும்பத்தினருடன் நேரத்தை கழிக்க கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை நான் மிகவும் நேசிக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்

# கோட்ட மட்ட கரப்பந்து

## வயாவிளான் மத்திய ம.வி. சம்பியன்



(மல்லாகம்)

தெல்லிப்பளை கோட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. தெல்லிப்பளை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி அண்மையில மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. இதில் ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி 25:11 22:16 எனற நேர் செற் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் மல்லாகம் மகாவித்தியாலய அணியும் மெய்கண்டான் மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. இதில் மெய்கண்டான் மகாவித்தியாலய அணி 25:19 25:21 என்ற செட் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (93)

# வடக்கின் போர்

## நாளை ஒரு நாள் ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் இனிங்ஸ் போட்டியைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெறும் ஒரு நாள் போட்டி நாளைய தினம் காலை சென். ஜோண்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

11ஆவதுஆண்டாக இடம்பெறவுள்ள இப்போட்டித் தொடரில், இரு அணிகளும் இதுவரை ஐந்து வெற்றிகளைப் பதிவாக்கி சமநிலையில் உள்ளன. காலை 8.15 மணிக்கு வீரர்கள் அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து 9.00 மணிக்கு போட்டி ஆரம்பமாகும் எனவும், போட்டி நிறைவுற்றதுடன் மாலை 4.30 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும் எனவும், இதில் ஆட்டநாயகன் விருது மற்றும் வெற்றிபெறும் அணிக்கான கேடயம் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரு பாடசாலை மாணவர்களும் சீருடையுடன் மட்டுமே மைதனாத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும்,கல்லூரி பிரதான வாயிலூடாக அழைப்பிதழ் வழங்கப்பட்டோர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். எனவும், பழைய பூங்கா வீதியிலுள்ள நுழைவுாயில்கள் ஊடாகவே ஏனையவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் போட்டி அமைப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# கால்பந்து இறுதியில் துணைவி சென். நியூஸ்ரார்

(சங்கானை)

சங்கானைப் பிரதேச மட்ட கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டிக்கு துணைவி சென். நியூஸ்ரார் அணி தகுதிபெற்றுள்ளது.

சங்கானைப் பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு அதன் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் கடந்த 16ஆம் திகதி கால்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டமொன்று இடம்பெற்றது.

இதில் துணைவி சென். நியூஸ்ரார் அணியும், அராலி சில்வஸ்ரார் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் கோல் போடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டன. இந்தப் போராட்டத்தில் இரு அணிகளும் சமநிலையை மட்டுமே கொடுத்தது. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 2-1 என்ற கோல் கணக்கில் துணைவி சென். நியூஸ்ரார் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. ஏற்கனவே, நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மூளாய் வளர்மதி அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிரதேச மட்ட கரப்பந்தாட்டம்

## இறுதியில் மட்டுவில் ஐங்கரன், ஸ்ரீமுருகன்

(கைதடி)

தென்மராட்சிப் பிரதேச மட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐங்கரன், சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு அதன் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் கடந்த வாரம் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கைதடி குமரன் விளையாட்டுக் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரில் பிரதேசத்திற்குட்பட்ட பல அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இதன் அரையிறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐங்கரன், மறவன் புலவு அம்பிகை, சாவகச்சேரி ஸ்ரீமுருகன், மட்டுவில் ஞானதீபம் ஆகிய அணிகள் தகுதிபெற்றன. இதில் முதலாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மறவன் புலவு அம்பிகை அணியும், மட்டுவில் ஐங்கரன் அணியும் மோதின. ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய மட்டுவில் ஐங்கரன் அணி 25-24, 25-19 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணியும், மட்டுவில் ஞானதீபம் அணியும் மோதின. இப்போட்டியில் ஸ்ரீமுருகன் அணி 25-22, 25-21 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இதேவேளை, மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு மட்டுவில் கண்ணகை,சங்காத்தனைஸ்ரீமுருகன் அணிகள் தகுதிபெற்றுள்ளன.இவ்விரு இறுதிப் போட்டிகளும் விரைவில் இடம்பெறும் எனவும், கால்பந்து எல்லேபோன்ற போட்டிகள் இந்த வார இறுதியில் இடம்பெறும் எனவும் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (118)

# ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்

(கருகம்பனை)

அமரர் கனகசபை கேசவமூர்த்தி நினைவு வெற்றிக் கிண்ணத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றிக் கொண்டது. தெல்லிப்பளை கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தினால் அமரர் கனகசபை கேசவமூர்த்தி நினைவாக மாவட் கரப்பந்தாட்டத் தொடர் நடத்தப்பட்டது. இத்தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.



இதன் இறுதிப் போட்டிக்கு கரப்பந்தாட்டப் போட்டியில் சிறந்து விளங்கும் ஆவரங்கால் மத்தி அணியும், ஆரவங்கால் இந்து இளைஞர் அணியும் தகுதிபெற்றன. ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25-21, 23-25,25-19, 25-17 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில், இரு அணி ஆதரவாளர்கள், கருகம்பனை விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக்கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (93)

# விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சனசமூக நிலையம் மற்றும் விநாயகர் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், சித்திரைப் புத்தாண்டு விழாவை முன்னிட்டும் மாபெரும் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

கொழும்புத்துறை பிரதேச எல்லைக்குள் இருக்கும் பிரதேச் இளைஞர், யுவதிகளின் ஆரோக்கியத்தைக் கருத்திற் கொண்டே இப்போட்டி வருடாவருடம் நடத்தப்படுவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். போட்டி அனைத்தும் கொழும்புத்துறை துரையப்பாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் எனவும், 26ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 7ஆம் திகதி வரையும் போட்டி இடம்பெறும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.இதில் கால்பந்து, மென்பந்து கிரிக்கெட், கரப்பந்து, கயிறு திரித்தல், கிடுகு பின்னுதல்,தேங்காய் துருவுதல், நீச்சல், படகோட்டம், மரதன் ஆகிய போட்டிகள் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எஸ்.பி.)

# விசித்திர நாடகமொன்றின் பார்வையாளர்கள்!

ஜெனிவா அழுத்தங்களால் அரசாங்கத்திற்கு எத்தகைய நெருக்கடிகள் வரக்கூடும் என்னும் அனுமானங்களுக்கு அப்பால், இதனால் தமிழ் மக்களுக்கு எத்தகைய நன்மைகள் வரக்கூடும் என்பது பற்றி சிந்திப்பதே சரியானது. நிலைமைகளை சற்று கூர்ந்து நோக்கும் போது, இறுதியில் தமிழ் மக்கள் விசித்திர நாடகமொன்றின் பார்வையாளர்கள் நிலைமைக்கு தள்ளப்படுவார்களா என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஏனெனில், விடுதலைப் புலிகளின் அழிவிற்கு பின்னர், தமிழரின் பிரச்சினை முழுமையாகவே சர்வதேசமயப்பட்டு விட்டது. இந்த - சர்வதேசமப்படுத்தலின் மூலம் நன்மையிருப்பதான ஒரு தோற்றமே அனைவராலும் காண்பிக்கப்படுகிறது. ஆனால் சர்வதேச அழுத்தங்கள் என்பவை முற்றிலும் சுயசார்புக்கு உட்பட்டவை என்பதை இங்கு அழுத்தமாக குறித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தவிர, சர்வதேச அரசியல் அணுகுமுறைகள் முற்றிலும் குறித்த அரசை மையப்படுத்தியதேயன்றி, அவ்வரசால் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் குழுக்களை அல்ல.

அமெரிக்க அணுகுமுறைகளில் இந்த விடயத்தை ஒருவர் தெளிவாக காண முடியும். விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் முன்னணியில் ஈடுபட்ட தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஒரு போர்க் குற்றவாளி என்றவாறான பிரசாரங்களை பல மனித உரிமை அமைப்புக்கள் பிரசாரப்படுத்தி வருகின்ற சூழலில், சவேந்திர சில்வா அமெரிக்க மரையன் படைப் பிரிவின் பல்கலைக்கழகத்தில் உரையாற்றியிருக்கின்றார்.

தீவிரவாதம் எவ்வாறு அழிக்கப்பட்டது என்னும் தலைப்பில் சில்வா உரையாற்றியிருக்கின்றார். இங்கு பிறிதொரு விடயத்தையும் எடுத்து நோக்கலாம். அமெரிக்க பசுபிக் கட்டளைபீடத்தின் படை அதிகாரிகள் குழுவொன்று, கடந்தமாதம் இலங்கைப் படையினருக்கு பயிற்சிகளை அளித்துள்ளது. வவுனியா பூ ஓயாவிலுள்ள இலங்கை இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு முகாமில் இப்பயிற்சி இடம்பெற்றுள்ளது. இதனை சர்வதேச உறவுகளின் அடிப்படை தெரியாத சில தமிழ் நோக்கர்கள் அமெரிக்காவின் இரட்டை முகமென செய்தியிடலாம். இது அமெரிக்காவின் இரட்டை முகமல்ல. இதுதான் சர்வதேச உறவின் அடிப்படையாகும்.

அனைவரும் அறிந்த உண்மை - சர்வதேச ஆதரவு வெளியொன்றில் தனித்துவிடப்பட்ட விடுதலைப் புலிகளை, அரச படைகள் அழித்தொழித்தன. சர்வதேச ஆதரவின்றி விடுதலைப்புலிகள் போன்றதொரு வலுவான இராணுவ அமைப்பை இலங்கை அரசால் எதிர்கொண்டிருக்கவும் முடியாது. மேற்படி சர்வதேச ஆதரவு வெளியானது, அமெரிக்காவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட "பயங்கரவாதத்தின் மீதான யுத்தம்" (War on terror) என்னும் சுலோகத்தின் ஊடாக உருப்பெற்ற ஒன்று என்பதும் நாம் அறிந்ததே! அமெரிக்கா, 1997ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத இயக்கமாக பட்டியலிட்டது. அமெரிக்காவின் பட்டியல்படுத்தல் என்பதே குறிப்பிட்ட அமைப்புக்கான மறைமுக எச்சரிக்கைதான். ஜனநாயகத்திற்கு திரும்புங்கள் என்பதுதான் பயங்கரவாத பட்டியல்படுத்தலின் மறைமுக செய்தியாகும். இன்று விடுதலைப்புலிகள் பூண்டோடு அழிக்கப்பட்டுவிட்டதொரு புறச்சூழலில் கூட, அமெரிக்கா விடுதலைப்புலிகளை பயங்கரவாத பட்டியலில் இருந்து நீக்கவில்லை. 2011ஆம் ஆண்டு, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தால் வெளியிடப்பட்டிருந்த தீவிரவாதத்திற்கு எதிரான அறிக்கையில் கூட, புலிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்பது பலரும் அறிந்திராத செய்தி.

இங்கு ஒரு சுவாரசியமான தகவலொன்றையும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது. அமெரிக்க வெளியக உளவுத்துறையும், உலகின் மிகவும் சக்திவாய்ந்த அமைப்புமான சி.ஐ.ஏயின் இணையத்தளத்தில், ஒவ்வொரு நாடுகள் குறித்தும் தகவல்கள் பதிவிடப்பட்டுள்ளன. அவை உலக உண்மை விபரம் (world Factbook) என்னும் தலைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு விடயம், பலம்பொருந்திய சர்வதேச அணுகுமுறையென்பது, எந்தளவிற்கு புதிர்கள் நிறைந்த, ஒரு விசித்திர நாடகமாக இருக்கின்றதென்பதற்கு நல்ல உதாரணமாகும்.

இலங்கை தொடர்பான பல்வேறு தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடிய குழுக்கள் பற்றியும் சி.ஐ.ஏ மதிப்பிட்டுள்ளது. இதிலுள்ள சுவையான செய்தி என்னவென்றால், அத்தகைய அழுத்தக் குழுக்களில் ஒன்றாக அழிவுற்ற விடுதலைப்புலிகள் இயக்கமும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில் மிகவும் ஆச்சரியமான விடயம், சி.ஐ.ஏயின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பின்வரும் பகுதி - "விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச செயலராக சிவபரன் என்பவரும், சட்ட ஆலோசகராக ருத்திரகுமார் என்பவரும் இயங்கிவருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2009 இல், குறித்த விடுதலைப்புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டிருப்பினும், சில உறுப்பினர்கள் நாடு முழுவதும், சிதறிக்கிடக்கின்றனர். எனினும் 2009 மே மாதத்திலிருந்து எந்தவொரு சம்பவங்களும் நிகழவில்லை." ஆனால் இந்த ருத்திரகுமாரன் தற்போது அமெரிக்காவில்தானே இருக்கிறார். ஆனால் இந்த சிவபரன் என்னும் இயற்பெயருடைய நெடியவன் என்பவர் நோர்வேயில் அல்லவா இருப்பதாக சொல்கிறார்கள்! - இப்படியான கேள்விகள் உங்களுக்குள் எழும். இதனால்தான் இப்பத்தி விசித்திர நாடகமொன்றின் பார்வையாளர்கள் பற்றி குறிப்பிடுகின்றது. ஜெனிவாவினால் என்ன நடக்குமென்பதற்கெல்லாம் அப்பால், விசித்திர நாடகமொன்றை நாம் அனைவரும் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறோம் என்பது மட்டுமே உண்மை. இந்த நாடகத்தில் சிறிது காலம், ஒரு குணச்சித்திர வேடத்தில் நடிப்பதற்கான வாய்ப்பு நிச்சயம் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்தேயாகும். எவ்வளவு காலத்திற்கு இப்படியே நாடகம் பார்த்துக் கொண்டிருப்பது? இது தமிழ் மக்களின் சிந்தனைக்குரியது.





- யதீந்திரா கட்டுரையிலிருந்து.

## திருடனுக்குக் கூட தெரிந்திருக்கிறது!

மேட்டர்லிங் என்பவர் ஒரு புகழ்பெற்ற பெல்ஜியம் எழுத்தாளர்.

அவர் எழுதிக் கொண்டிருக்கும் போது அவருக்கு எந்த இடையூறும் இருக்கக் கூடாது. அப்படி யாராவது ஏதாவது செய்து விட்டால் அவருக்குக் கடுமையான கோபம் ஏற்படும்.

ஒரு நாள் அவருடைய மனைவி கடைக்குச் சென்று திரும்பினாள்.

வீட்டின் கதவு திறந்து கிடந்தது. உள் அறைகள் அனைத்தும் திறந்து கிடந்தன. பொருள்கள் எல்லாம் சிதறிக் கிடந்தன. அங்கு திருடன் வந்து போனதற்கான அறிகுறிகள் அனைத்தும் தென்பட்டன.


அவள் வேகமாக வீட்டிலிருந்த அலுமாரியைப் போய்ப் பார்த்தாள். அது உடைக்கப்பட்டு இருந்தது. அதிலிருந்த நகைப்பெட்டியில் வைத்திருந்த அனைத்து நகைகளும் திருட்டுப் போயிருந்தது.

இதனால் கோபமடைந்த அவள் அங்கு நடந்தது எதுவும் தெரியாமல் எழுதிக் கொண்டிருந்த கணவனை நோக்கிச் சென்று சத்தம் போட்டாள்.

தனது நகைகள் எல்லாம் திருட்டுப் போய்விட்டன. இது கூடத் தெரியாமல் எழுதிக் கொண்டிருக்கிறீர்களே? என்று கூச்சலிட்டாள்.

எழுத்தாளருக்குக் கோபம் வந்துவிட்டது.

"உனக்கு அறிவு எதுவும் இருக்கிறதா? இல்லையா? நான் எழுதிக் கொண்டிருக்கும் போது எந்தக் குறுக்கீடுகளும் இருக்கக் கூடாது என்று உனக்குத் தெரியாதா? நம் வீட்டில் திருடிச் சென்ற திருடனுக்குக் கூட, நான் எழுதும் போது எந்தக் குறுக்கீடும் செய்யக் கூடாது என்று தெரிந்திருக்கிறது. உனக்கு எதுவும் தெரியவில்லை. இப்படி கூச்சல் போடுகிறாயே?" என்றார் அவர்.




## சிறுநீரில் வெல்லம் அறிய....

எளிய முறையில் சிறுநீரில் வெல்லம் உள்ளதா என்பதை பின்வரும் பரிசோதனையின் மூலம் அறியலாம்.

ஒரு சோதனைக் குழாயில் ஐந்து மில்லி பெனிடிக்ஸ் மருந்தை எடுத்துக் கொண்டு சூடாக்க வேண்டும். நிறமாற்றம் இல்லை என்ற பின், எட்டு சொட்டு சிறுநீர் இத்துடன் சேர்த்து நன்கு கொதிக்க வைக்கவேண்டும். பின்னர் சிறிது நேரம் குளிரவைத்து நிறமாற்றத்தைப் பார்க்கவேண்டும். சிறுநீரில் வெல்லம் உள்ளதா என்பதை பின்வரும் நிலைகளைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்:

நீலம் - சிறுநீரில் வெல்லம் இல்லை.
பச்சை - குறைந்த அளவு வெல்லம்.
மஞ்சள் - சற்று அதிக அளவு உள்ளது.
செம்மஞ்சள் - அதிக அளவு உள்ளது.
சிவப்பு - மிகவும் அதிக அளவு வெல்லம் உள்ளது.

இந்தப் பரிசோதனை முறைக்கு "பெனிடிக்ஸ்" முறை என்று பெயர். நீரிழிவு நோய் கண்டறிய உதவும் சோதனைகள் பல இருப்பினும் சாதாரண மக்களும் தெரிந்து கொள்ள உதவும் மிக எளிய சோதனையே மேற்கண்ட "பெனிடிக்ஸ்" முறை.



("நீரிழிவு நோயும் விளக்கங்களும்" நூலிலிருந்து...)

1

- சாரு நிவேதிதா -

# சத்தியமே கலைக்கு ஆதாரம்

தமிழகமே தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடப் போகும் பரதேசி என்ற "காவிய"த்தைப் பற்றி குறைந்த பட்சம் எதுவுமே எழுதாமல் இருந்தாலாவது கொஞ்சம் உருப்பட்டு விடலாம். ஆனால் என் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. ஏனென்றால், இந்தத் தட்டையான படத்தைப் பற்றி இதன் இயக்குனரே பெரியதொரு காவியத்தைப் போல் எண்ணிக் கொண்டிருக்கிறார். ஊடகங்களும் இதைக் காவியம் என்று கொண்டாட ஆரம்பித்து விட்டன. இந்தி சினிமாவில் தேவ்.டி, கேங்க்ஸ் ஆ.ப் வாஸேபூர் என்ற அற்புதமான படங்களை எடுத்த அனுராக் காஷ்யப்பே ஆரம்பித்து வைத்திருக்கிறார். பரதேசி ஒரு காவியம் என்கிறார் அனுராக். இந்தியிலும் ஆங்கிலத்திலும் சப்டைட்டில் போட்டு இதை இந்தியா பூராவும் திரையிடப் போகிறேன் என்கிறார். இது போன்ற ஒரு படம் இந்தியாவிலேயே வந்ததில்லை என்கிறார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எப்படி ஒரு sensible ஆன இயக்குனரால் இப்படி ஒரு மொக்கைப் படத்தை பாராட்ட முடிகிறது என்று என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகப் புரிகிறது. தமிழனால் மிகவும் கொண்டாடப்படும் சினிமாத் துறையில் கூட சராசரித் தன்மை (mediocrity) தான் சிலாகிக்கப்படு கிறது. அதன் அடையாளம்தான் தமிழர்களால் கலைஞனாகக் கொண்டாடப்படும் பாலா. ஏற்கனவே இது பற்றி என் ஆதங்கத்தையும் கவலையையும் எழுதியிருக்கிறேன். மலையாளத்தில் அரை டஜன், கன்னடத்தில் அரை டஜன், இந்தியில் அரை டஜன் பேர் பாரதீய ஞானபீடப் பரிசு வாங்கியிருக்கிறார்கள் என்றால் அவர்கள் அத்தனை பேரும் அந்தப் பரிசுக்குத் தகுதியான எழுத்துக் கலைஞர்கள். ஆனால் தமிழில் கிடைத்த இரண்டே பரிசு இரண்டு வணிக எழுத்தாளர்களுக்குக் கிடைத்தது. இலக்கியவாதிகளுக்கு அல்ல. கரிச்சான் குஞ்சு, தி.ஜானகிராமன், சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், ஞானக் கூத்தன், தேவதேவன், இந்திரா பார்த்தசாரதி, லா.ச.ராமாமிர்தம், ஆதவன், சுஜாதா, எம்.வி.வெங்கட்ராம், ந.முத்துசாமி என்று நூறு இலக்கியவாதிகள் இருந்தும் இங்கே ஞானபீடம் வாங்கியது இரண்டு வணிக எழுத் தாளர்கள். இதேதான் பாலாவைக் கொண்டாடுவதிலும் நடந்து கொண்டிருக்கிறது.

ஆச்சரியம் இல்லை. இன்னும் ஓரிரு நாளில் பாருங்கள், "தமிழ் சினிமாவின் காவியம் பரதேசி" என்று பத்திரிகைகள் எழுதப் போகின்றனவா இல்லையா என்று. இப்போதே சினிமாத்துறையில் பரதேசியை க்ளாஸிக் என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். ஒரு இயக்குனர் அப்படித்தான் எனக்குக் குறுஞ்செய்தி அனுப்பியிருந்தார். குறுஞ்செய்தி கிடைக்காத மாதிரி கமுக்கமாக இருந்து விட்டேன்.

ஏன் இந்தப் படத்தை ஒரு தட்டையான படம் என்று சொல்கிறேன்?

கதை என்ன என்று பெரிதாக விளக்கி எழுதப் போவதில்லை. 1939ஆம் ஆண்டு சூலூர் என்ற கிராமத்தில் சந்தோஷமாக வாழ்ந்து வரும் கிராமத்து மக்களை பணத்தாசை காட்டி, வெகு தொலைவில் இருக்கும் தேயிலைத் தோட்டத்துக்கு அழைத்து வருகிறான் ஒரு கங்காணி. அந்த இடத்துக்கு நடந்தே வருவதற்கு நாற்பது நாட்களுக்கு மேல் ஆகிறது. வரும் வழியிலேயே ஒருத்தன் செத்து விழுகிறான். வந்த பிறகுதான் தெரிகி றது, அந்தத் தோட்டம் தப்பிக்கவே இயலாத ஒரு நரகக் குழி என்று. சாகும் வரை அங்கேயே தான் கிடந்து உழைக்க வேண்டும். இதுதான் கதை. இந்தக் கூட்டத்தில் ஒருவன் தான் ராசா (அதர்வா). கிராமத்தில் அங்கம்மாவைக் காதலிக்கிறான். அங்கம்மாவைப் பிரிந்து தேயிலைத் தோட்டத்தில் வந்து அடிமையாய் உழைக்கிறான். இதற்கிடையில் கிராமத்தில் அங்கம்மாவுக்குக் குழந்தை பிறக்கிறது. சீக்கிரம் ஊருக்குத் திரும்பி அவள் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டி, தன் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப் படுகிறான் ராசா. ஆனால் நான்கு ஆண்டுகளாகியும் விடுதலை கிடைக்க வில்லை. கடைசியில் அங்கம்மாவும் அங்கேயே வந்து சேர்கிறாள். "இந்த நரகக் குழியில் வந்து விழுந்து விட்டாயே!" என்று ராசா கதறி அழுவதோடு படம் முடிகிறது.



இவ்வளவுதான் கதை. இப்படிப்பட்ட கொத்தடிமைகள் இந்திய சுதந்திரத்துக்கு முன்பு மட்டும் அல்ல; இப்போதும் இருக்கிறார்கள்.

சரி, சாகும் வரை கொத்தடிமை களாக வாழும் தொழிலாளிகளின் கதைய்யை பாலா எப்படிப் படமாக் கியிருக்கிறார் என்பதுதான் நம்முடைய அக்கறை. இதில் இன்னொரு முக்கியமான விஷயம். படத்தின் இடைவேளை வரை அந்தக் கிராமத்து வாழ்க்கைதான் படமாக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தேயிலைத் தோட்டத்துக்குக் கிளம்பி வரும் போதுதான் இடைவேளை டைட்டிலே வருகிறது. ஆக, படமே இடைவேளையின் போதுதான் ஆரம்பிக்கிறது. அதுவரை படத்தில் எதுவுமே இல்லை. ஓரிரு காட்சிகளைத் தவிர எல்லாமே செயற்கையாக இருக்கிறது. அந்த சூலூர் கிராமம் அப்பட்டமான ஒரு செட் மாதிரி இருக்கிறது. அசல் கிராமமே தெரியவில்லை. எவ்வளவு செயற்கையாக இருக்க முடியுமோ அவ்வளவு செயற்கையாக இருக்கிறது சூலூர் கிராமம். செவன் ஸ்டார் ஹோட்டல்தானே கேள்விப் பட்டிருக்கிறோம்? இதில் வருவது செவன் ஸ்டார் கிராமம். அப்படித் துடைத்து விட்டாற்போல் கண்ணாடி போல் ஜொலிக்கிறது சூலூர்.

இன்னொரு செயற்கை அந்த ஹீரோயின் நடிகை வேதிகா. அவருடைய உடல் மொழியில் அத்தனை செயற்கைத்தனம் தெரிகிறது. சமீபத்திய தமிழ் சினிமாவில் இவ்வளவு செயற்கையான ஒரு நடிப்பை நான் பார்த்ததில்லை. மேலும் அவருடைய ஒப்பனை படு மோசமானது. சில பழைய தமிழ்ப் படங்களில் ஆதிவாசிகளைக் காண்பிக்கும் போது மூஞ்சியில் கரியை அப்புவார்கள் அல்லவா? அதே போல் ஏதோ ஒரு களிம்பை வேதிகாவின் முகத்திலும் உடம்பிலும் அப்பியிருக்கிறார்கள். கொடூரமாக இருந்தது.

ஒட்டு மொத்த படமே மிக பலவீனமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்)



## விலை மதிப்பில்லாதது!

ஒரு படையெடுப்பின்போது அலெக்ஸாண்ட ரின் படை தங்கத்தாலான பெட்டி ஒன்றைக் கைப்பற்றியது.

"அரசே, விலைமதிப்பில்லாத இந்தத் தங்கப் பெட்டியை எங்கே வைப்பது?" என்று கேட்டார் தளபதி.

"நீ நினைப்பது போல இந்தத் தங்கப் பெட்டி விலைமதிப்பில்லாதது அல்ல. ஒரு பொற்கொல்லரிடம் இதைக் காட்டினால் இதன் மதிப்பை எடை போட்டுக் கூறி விடுவார். ஆனால் என்னிடமுள்ள ஹோமரின் புத்தகங்கள்தான் விலை மதிப்பில்லாதது. அவற்றை இந்தத் தங்கப் பெட்டியில் வைத்துப் பத்திரப்படுத்து. அப்போதுதான் இந்தப் பெட்டிக்கு உண்மையான மதிப்பும் மரியாதையும் வரும்" என்றாராம் அலெக்ஸாண்டர்.

## அபூர்வ நாட்கள்!

- தென் துருவத்தில் டிசம்பர் 22 இல் சூரியன் மறையாது. ஜூன் 21இல் சூரியன் உதிக்காது.
- வட துருவத்தில் டிசம்பர் 22 முழுவதும் இரவா-கவே இருக்கும். ஜூன் 21 முழுவதும் பகலாகவே இருக்கும்.
- பூமியில் டிசம்பர் 22 இல் நீண்ட பகல் இருக்கும்.
- பூமியில் ஜூன் 21 இல் குறைந்த பகல் இருக்கும்.
- பூமியில் இரவும் பகலும் சம அளவில் இருக்கும் நாட்கள் - மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 23.

## பெண் சிசுக் கொலை!



இந்துக் குடும்பங்களில், ஆண் குழந்தைகளுக்குத்தான் மதிப்பு அதிகம். இதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், அடிப்படைக் காரணம், இந்து மதக் கோட்பாடுகள்தான். இந்துக் குடும்பங்களில் பெற்றோர் இறந்தவுடன், அவர்களுக்கு இறுதிக் கடன்களை ஆற்றவும், பின், அவர்கள் ஆத்மா சாந்தியடையவும், ஆண்மக்களே தகுதி உள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.

தந்தை வழிக் குடும்பங்களில் குடும்பப் பெயரும், சொத்துரிமைகளும், ஆண் மக்களையே சென்றடையும். அதனால், குடும்பம் வழி வழியாக தழைத்தோங்க, ஆண் மக்களே தேவைப்பட்டனர். ஆண் மக்கள் பிறந்தது முதல் இறப்பது வரை, பெற்றோருடன் வாழ்ந்து வந்ததால், அவர்கள் பொறுப்பாயிற்று இது.

இதற்கு மாறாக, பெண் குழந்தைகள் திருமணமான பின், பெற்றோரைப் பிரிந்து, கணவன் வீடு அனுப்பப்பட்டு, அங்கு வாழ வைக்கப்படுகின்றனர்.

பெண் குழந்தைகளை, வளர்த்து ஆளாக்கி, திருமணம் செய்து கொடுப்பதும், பெற்றோருக்கு ஒரு சுமையான பொறுப்பாகி விட்டது. கணவன் இறந்தாலோ, அவனால் கைவிடப்பட்டாலோ, அவர்களை வைத்துக் காப்பாற்றும் பொறுப்பும் பெற்றோரைச் சேர்கிறது.

அதிக பெண்களைப் பெற்ற தந்தையை, சமூகம் தாழ்வாகக் கருதுகிறது. ஆண், தாழ்ந்த சாதியில் மணம் புரிந்து கொண்டாலும், அவன் குடும்பம் ஏற்றுக் கொள்கிறது பெண், தாழ்ந்த சாதி ஆணைத் திருமணம் செய்து கொண்டால், குடும்பம் அவளைப் புறக்கணித்து, ஏற்பதில்லை.

இப்படி இந்து மதக் கோட்பாடுகளே பெண் சிசுக் கொலைக்கு காரணமாகிறது.

("பெண்ணியம் தோற்றமும், வளர்ச்சியும்" என்ற நூலில்.)




# யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

வலிகாமத் திருநகரில் பழம்பெரும் திருப்பதி மல்லாகம். பெரும் கல்விமான்கள் வாழ்ந்த அறிவுசார் திருப்பூமி. இத்திருவூரின் பெருமைக்குக் காரணமாக விங்குவதுதான் மல்லாகம் மகா வித்தியாலயம்.

இப்பாடசாலை 1860 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

'இறை நெறி நிற்க அறமுறை கற்க' என்ற மகுட வாசகத்தைக் கொண்டது. 'நவீன உலகிற்கு ஏற்ப சமூகப் பற்றும் இசைவும் கொண்டவர்களை உருவாக்குதல்' என்ற வாசகம் பாடசாலையின் தூரநோக்காகும்.

"பாடசாலைக்கு கிடைக்கக்கூடியதும், பெற்றுக் கொள்ளக்கூடியதுமான வளங்களை முழுமையாகவும், திறமையாகவும் பயன்படுத்தி நிறைவான தேர்ச்சியைக் கொண்டதும், வேலைஉலகிற்கு பொருத்தமானதுமான நற்பிரஜைகளை உருவாக்குதல்" என்ற வாசகத்தை பணிக்கூற்றாகக் கொண்டுள்ளது.


ஸ்தாபகர்
திரு.தெ.சு.துரையப்பா

இப்பாடசாலையின் வித்தியாலய அன்னையின் ஸ்தாபகர் தெ.சு.துரையப்பா (1860 - 1913) ஆவார்.

பரீட்சைப் பெறுபேறுகளில் தனக்கென ஒரு உயர்வான இலக்கினை எட்டி சாதனை படைக்கும் இக்கல்விக்கூடம், பல்துறைசார் அரச ஊழியர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

தடகளப்போட்டிகளிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தனக்கே உரிய பாணிகளில் வெற்றிகள் பலவற்றை ஈட்டி பாடசாலை பெருமை அடைகின்றது.

யாவற்றிலும் மேலாக மிக அண்மைக்காலத்தில் தமிழ் மொழி மூல **Mother** ஸ்ரீ போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் பாராட்டையும் பெற்றமை பாராட்டிற்குரிய விடயமாகும்.


அதிபர்
திரு.மா.நாகேந்திரசீலன்

$1^C$ பாடசாலையாக தரம் கொண்ட இப்பாடசாலை க.பொ.த உயர்தர , க.பொ.த சாதாரணதர பரீட்சைகளில் பெறுபேற்று ரீதியாக தனக்கென தொடர்ந்து முத்திரையைப் பதித்து வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

அழகு மிகு ஆலயங்களும், வியப்புறு தொழில் வளமும் மிக்க மல்லாகக் கிராமம் ஈழத்தின் புகழ் பூத்த அறிஞர்கள் பலரை ஈய்ந்த எழில்த் தாய் ஆகும்.

இவளின் அழகினை மேலும் மெருகூட்டி அணி செய்பவள் மல்லாகம் மகா வித்தியாலயம், மல்லாகத்தையும், அதனைச் சூழ உள்ள பிரதேசங்களையும் சேர்ந்த மக்களின் மேன்மைக்கும், சிறப்புக்கும் இக்கல்லூரியே தோன்றாத் துணையாக இருக்கின்றது.

இவ்வாறான பாடசாலையின் சிறப்புக்குக் காரணமாகக் கல்லூரி அதிபர்கள் பணியாற்றிய, தற்போதும் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்: ஆகியோரது தீர்க்கதரிசன பணியானது பாராட்டப்படவேண்டியது.




அண்மையில் தமது நீண்ட காலத் தேவையான விளையாட்டு மைதானத்தைத் தனக்குரியதாக்கிக் கொண்ட கல்லூரி தனது வரலாற்றுப் பயணத்தை தளராது மேலும் தொடர வாழ்த்துகின்றோம். பழம்பதி வேழமுகத்து விநாயகப் பெருமான் கடைக்கண் அருட்கடாட்சம் மல்லாகம் மகா வித்தியாலயத்திற்கு என்றும் துணை நிற்கப் பிரார்த்தனை செய்வோம்.


பாடசாலை ஆசிரியர் குழாம்


மாணவ தலைவர்கள்


வகுப்பு மாணவ முதல்வர்கள்


மேலைத்தேய வாத்திய இசைக்குழு

# பிரதேச சபைக்காணி விவகாரம்; எதிர்க்கட்சித்தலைவர் குற்றச்சாட்டு

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தனக்குக் கிடைத்த ஆவணங்களை சபைக்குச் சமர்ப்பிக்காது. இருட்டடிப்பு செய்ததன் விளைவாகவே பிரதேச சபைக்கு சொந்தமான மாதகல் காடாபுலத்தில் உள்ளகாணி இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு தவிசாளரே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என ஈ.பி.டி.பி. வலி.தென்மேற்கு பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வெ. அன்ரன்ஜோன்சன் (ஜீவா) குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில் மாதகலில் கொல்களம் அமைந்துள்ள, குறித்த காணியை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி, கடந்த யூன்மாதம் 12ஆம் திகதி இராணுவ அதிகாரியினால் தவிசாளருக்கு எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆயினும், அந்த வேண்டுகோள் கடிதத்தினை பிரதேசசபை கூட்டத்தில் சமர்ப்பிக்காது தவிசாளர் தவிர்த்துவந்துள்ளார். ஊடகங்களில் குறித்த காணி தொடர்பான தகவல்கள் வெளியாகிய பின்னர் சுமார ஆறு மாதங்கள் கழித்து கடந்த 19ஆம் திகதியே குறித்த கடிதத்தினை சபையில் சமர்ப்பித்துள்ளார்.

இந்தக் கடிதத்தினை கடந்த யூன்மாதமே சபைக்கு தெரியப்படுத்தியிருந்தால், நாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஊடாக உரிய இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு குறித்த காணியை இராணுவம் பெற்றுக்கொள்வதை தடுத்திருக்கமுடியும். விடயம் பாரதூரமாகிய பின்பே எமக்கு இது தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆவண இருட்டடிப்புக்கு காரணம் என்ன என்பது மர்மமாகவே உள்ளது. இதுபோன்ற செயல்களில் தவிசாளர் இனியும் ஈடுபடக் கூடாது என அவர் தெரிவித்தார். (54)

# கைதடி முதியோர் இல்லத்தில் மூதாட்டி இயற்கை மரணம்

(திருநெல்வேலி)


கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த 38 வருடங்களாகத் தங்கி வாழ்ந்துவந்த ஹங் வடகொல என்னும் இடத்தைச் சேர்ந்த கைலாயம் நாகேஸ்வரி என்னும் மூதாட்டி கடந்த திங்கட்கிழமை மதியம் இயற்கை மரணம் எய்தினார்.

1975ஆம் ஆண்டு மீரிகம அரசமுதியோர் இல்லத்திலிருந்து கைதடிக்கு இவர் மாற்றம் செய்யப்பட்டிருந்தார். அப்போது இவருக்கு வயது 78 எனத் தெரிவிக்கப்பட்டது. மலையகத்தைச் சேர்ந்த இவரது பெற்றோர் இராமசாமி பச்சையம்மா தம்பதிகளாவர்.

கடந்த இரண்டு வருடங்களாக இவர் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையிலிருந்தார். அக்காலப் பகுதியில் இவருக்கான மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்து இல்லப்பராமரிப்பாளர்கள் மிகவும் பரிவுடன் இவரைப்பராமரித்து வந்தனர்.

இல்ல முதியோர்களும், உத்தியோகத்தர்களும் இவருக்கான இறுதிக்கிரியைகளை, சகல மரியாதைகளுடன் நடாத்தி அன்று மாலையே கைதடி மயானத்தில் உடலைத் தகனம் செய்தனர். உடலுக்கு இல்ல உத்தியோகத்தர் ஒருவர் தீ மூட்டினார். (137)

# ஆரோக்கியமான வாழ்க்கை நிலையம் யாழ்ப்பாணத்தில் திறந்துவைப்பு



(யாழ்ப்பாணம்)

அரச உத்தியோகத்தர்களுக்கான 'ஆரோக்கியமான வாழ்க்கை நிலையம்' யாழ்ப்பாணத்தின் திருநெல்வேலியில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதாதார பணிப்பாளர் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டுள்ள இந்நிலையத்தை வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்நிலையத்தின் மூலம் யாழ். மாவட்டத்தினைச்சேர்ந்த அரசஊழியர்கள் பயனடைவர்கள். இந்நிலையத்தில் வெளிநோயாளர் பிரிவு, ஆய்வு கூட வசதி, ஆண்கள், பெண்களுக்கான உடற்பயிற்சிப் பிரிவு என்பன அமையப்பெற்றுள்ளன. எதிர்வரும் காலங்களில் வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், சுகாதாரத் துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு

(வவுனியா)

வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தினால் வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஸ். வாசன் தெரிவித்தார்.

சுயதொழில் கடன் பெறவுள்ளவர்களுக்கு முதலாம்கட்டம், இரண்டாம்கட்டம் என இரு கட்டங்களாக இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர், கொடுப்பனவுகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வவுனியா பிரதேசசெயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி பிறேமா விமலேந்திரனை தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

சுயதொழில் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**(முன்னைய தொடர்)**

நிசாந்தன் அமுதா, (244,வீட்டுத்திட்டம்,கற்பகபுரம்,பம்பைமடு), பெரியசாமி கலா(85,மதுராநகர், கல்நாட்டினகுளம், ஆசிகுளம்), தம்பாப்பிள்ளை தேவகி (மாதர் பனிக்கா, மகிழங்குளம், மருதமடு, ஓமந்தை), தில்லைநடராசா செல்வராணி (மாதர் பனிக்கா, மகிழங்குளம், மருதமடு, ஓமந்தை), ஆறுமுகம் ராணியம்மா (மதீனாநகர், மகாறம்பைகுளம்,வவுனியா), இராமசாமி சோதியம்மா (1ஆம் ஒழுங்கை, காத்தார்சின்னகுளம் வீதி, மகாறம்பைகுளம்), சுப்பிரமணியம் தவமலர் (55வீதி, மகாறம்பைகுளம்), ஆனந்தராசா மனோன்மணி மாதர்பனிக்கா, (மகிழங்குளம், பாலமோட்டை), சிவஞானம் இலங்கநாயகி (சொந்தகாரன்குளம், பாலமோட்டை), வினோதன் தெய்வராணி (கோயில் குஞ்சுக்குளம், பாலமோட்டை, வவுனியா),

**2ஆம் கட்டம்**

ஜீவராசா ஜெயலா (125/37 கணேசபுரம்,மரக்காரம்பளை,வவுனியா), மகேந்திரன் சுரேக்கா (02,பாடசாலை வீதி,மகாறம்பைகுளம்,வவுனியா), விக்கினேஸ்வரி சீமோன் (பூம்புகார், கல்மடு, வவுனியா), கோடீஸ்வரி தமிழ்செல்வம் (5பி,யூ.சி, குவாட்டஸ் மன்னார் வீதி,வவுனியா) (தொடரும்..)

# பதிவிறக்கப் பெட்டகம்

புதுப்பேட்டை பார்த்துவிட்டு செல்வராகவனுடன் பேச தொலைபேசியில் அழைத்தபோது, 'ஸாரி, ராங்நம்பர்' என்ற குரல் வந்தது. நீங்கள் யார் என்றோ, உங்களுக்கு யார் வேண்டும் என்றோ கேட்காமல் அந்தப் பதில் வந்தது. அது பதிவு செய்யப்பட்ட குரலாக இருக்குமோ வென்று மீண்டும் தொலைபேசி செய்து உன்னிப்பாகக் கவனித்ததில், மறுமுனையில் பேசப்படுவது உயிருள்ள குரல்தான் என்பதை உணரமுடிந்தது. அந்தச் செய்கையும் பதிலும் எனக்கு மிகவும் பிடித்துப்போயிற்று. பின்னாட்களில் அந்தப் பதிலைக் கேட்கவே நான் அவ்வப்போது தொலைபேசி செய்வதுண்டு. ஒருநாளும் ஏமாற்றியதில்லை செ.ரா.

– கௌதம சித்தார்த்தன்

இன்றைய சராசரித் தமிழ்ப் படத்தில் கூட பல நடிகைகள அவர்களுக்காக வடித்துத் தந்த எளிமைப்படுத்தப்பட்ட பாத்திர வார்ப்பையும் மீறிச் சிக்கல்களைப் பிரதிபலிக்குமாறு நடித்திருக்கிறார்கள்; நடிக்கிறார்கள். ஆனால் தமிழ் சினிமா உலகம் இன்னும் நாயகனுக்கே உரியதாக உள்ளது. தமிழ் சினிமா நாயகர்கள் விதிவிலக்கில்லாமல் தமிழ் சினிமாவை பொழுது போக்குக்கு மேல் உயரமுடியாதபடி பார்த்துக் கொள்கிறார்கள்.

– அசோகமித்திரன்

இலட்சணமாய் பார்த்துப் பழகிய நாயகன் முகத்தை எந்தளவுக்கு முடியுமோ அந்தளவு அழுக்குப்படுத்தி விடுவார் பாலா. அத்தகைய நாயகனின் பிம்பம் கொண்டு பார்வையாளர்கள் மீது முதல் தாக்கத்தினை ஏற்படுத்துவார். அந்த அழுக்கு முகம் கொண்ட நாயகர்கள், மற்ற தமிழ்ப்பட நாயகர்களைப் போல சராசரியானவர்களே. உதாரணம் ஷங்கரின் நாயகர்களுக்கு இலஞ்சம் வாங்குவதும், பேரரசின் நாயகர்களுக்கு ரவுடியிசமும் பெருங்குற்றம். பாலாவின் நாயகர்களுக்கு தங்களை ஆதரவளிப்பவர்களைக் கொன்றால் பெருங்குற்றம். 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்பதே பெரும்பாலான தமிழ்ப் படங்கள் முன் வைக்கும் நீதி, நியாயம், தர்மம் இத்யாதி எல்லாம். "எது பாவம்?" என்று நிர்ணயிப்பதில் மட்டுமே இயக்குநர்கள் மாறுபடுகிறார்கள்.

– இது தமிழ்

இசைக்கருவிகளும், இசைகளும் நிலப்பகுதிகளை ஆழ் அகத்தில் உணர்வலை அடையாளங்களாய் எழுப்பும் தன்மைகள் உடையன என்பதினைப் பற்றி பரதேசி படத்தின் இசையமைப்பாளர் பிரகாஷ"க்கு கிஞ்சித்தும் தெரிந்திருக்க வில்லை. எல்லா நாடகீயமான காட்சிகளுக்கும் சஜாங் சாஜாங் என்று மேற்கத்திய சிம்ஃபொனி போலவோ, இசை நாடகம் போலவோ மேலெழும்பும் வயலின் இசை காட்சிகளை நராசப்படுத்துகிறது; அந்நியப்படுத்துகிறது. தேவரீர் காட்சிகளுக்கு ஏற்ற இயற்கையான சப்தங்களையே விட்டுவைத்திருக்கலாமே என்று கெஞ்சத் தோன்றுகிறது.

– எம்.டி.முத்துக்குமாரசாமி

ஏதோ ஸ்கூலுக்குப் போவது போல் இப்போதெல்லாம் தினம் ஒரு சினிமா பார்க்க வேண்டி வந்து விடுகிறது. இந்தப் பணியில் சில ஆச்சரியங்களும் சில விபத்துகளும் நேர்ந்து விடுகின்றன. 'ஸ்பெஷல் 26' என்று ஒரு படம். பார்த்து விட்டு காது மூக்கெல்லாம் புகை வர இயக்குனரிடம் வந்து "இப்படி ஒரு போரான படத்தைப் பார்த்ததே இல்லை" என்று சொன்னால் "இந்தியா பூராவும் இந்தப் படம் சூப்பர் ஹிட்" என்கிறார். பிறகு தான் விசாரித்தேன். இந்தியாவின் பல நகரங்களிலும் படம் சூப்பர் ஹிட். கடல் எனக்குப் பிடித்திருந்தது, மக்களுக்குப் பிடிக்கவில்லை. ஸ்பெஷல் 26 எனக்குப் பிடிக்கவில்லை. மக்களுக்குப் பிடித்திருக்கிறது. என்னடா இது, கிரகிக் கோளாறு என்று சோர்ந்திருந்த போதுதான் ஆதி பகவன் என்னைக் காப்பாற்றியது. எனக்கும் பிடிக்கவில்லை; மக்களுக்கும் பிடிக்கவில்லை. அமீருக்கு நன்றி.

– சாரு நிவேதிதா

என் வீட்டுப் பெண்கள் சினிமாவும் டிவியும் பார்க்கமாட்டார்கள் என்று எனக்கு அளித்த வெப் டிவி பேட்டியில் இயக்குனர் அமீர் சொன்னார். ஆனால் 'கன்னித்தீவு பெண்ணா' என்று குத்தாட்டம் போட அவர் தயங்குவதே இல்லை. அமீர் மட்டுமல்ல, விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய ஒரு சிலரைத் தவிர அத்தனை தமிழ் சினிமாகாரர்களும் அதே போன்றவர்கள் தான். இந்த ஹிப்போக்ரசிதான் தமிழ் சினிமா. – ஞாநி

# பல்கலை மாணவரின் திறமைகளை சர்வதேச மயப்படுத்த நடவடிக்கை

## உயர்கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் அவர்களின் திறன்களைக் கண்டறிந்து அவற்றை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக, நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் உள்ள மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தமது யோசனைகளை அமைச்சில் சமர்ப்பிக்க முடியுமென அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன குறிப்பிட்டார்.

அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் யோசனைகளில் சிறந்த கண்டுபிடிப்பு மற்றும் அவர்களின் திறனைக் கண்டறிந்து அவற்றை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுசெல்லவுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு புதியகண்டுபிடிப்புகள், யோசனைகள் மற்றும் அனுபவங்கள் முக்கியத்துவம் வாய்ந்தமையால் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு இது தொடர்பான யோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு, பின்னர் போட்டிகள் நடத்தப்பட்டு சிறந்தவற்றைத் தெரிவு செய்யவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மாகாண பயணிகள் போக்குவரத்து தற்காலிக அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

புத்தாண்டு காலப்பகுதியில் தற்காலிக பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான அதிகாரத்தை மாகாண பயணிகள்போக்குவரத்து அதிகாரிகளுக்கு வழங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் விசேட பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, அடுத்த மாதம் 8ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரை புத்தாண்டு விசேட பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், புத்தாண்டு காலப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# யாத்திரிகர் மீது தாக்குதல் ஏற்றுக்கொள்ளமுடியாது

## ஸ்ரீதரன் சுகு கண்டனம்



(கொழும்பு)

தமிழகத்திற்கு சென்றிருந்த இலங்கை யாத்திரிகர்கள் மீதான தாக்குதல் ஏற்றுக்கொள்ளமுடியாததென ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியின் செயலாளர் ஸ்ரீதரன் சுகு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பான நிலைப்பாடுகள் பிரதானமாக இரண்டு வகைப்பட்டவை. ஒன்று உணர்வு அறிவு பூர்வமானது. மற்றயது பைத்தியகாரத்தனமானதும் பாமர உணர்ச்சி வசப்பட்டதும், சுயநலமும், குரோதமும், விரோதமும் வெறுப்பும் நிறைந்தது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தெளிவாக விளங்கிக் கொள்ளப்படவேண்டும். "எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்" என்று கருதும் சகதிகள் எதையும் விளங்கிக் கொள்ள விரும்பாது.

இலங்கை சிங்களவர்கள், தமிழர், முஸ்லிம்கள் மலையக மக்கள், பறங்கி மலாய் இனக குழுக்கள் எனப் பல சமூகங்களும் வாழும் நாடு. இங்கு இன சமூகங்கள் தனித்துவம் சுயமரியாதை கண்ணியத்துடன் வாழ்வதற்கான நிலைமை ஸ்தாபிக்கப்படவேண்டும். இந்திய இறையாண்மைக்குள் இந்திய மாநிலங்களுக்கு இருப்பதுபோல தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். இத்தகைய தீர்வு உருவாகுவதற்கு ஒரு ஜனநாயக அமைதிச் சூழல் உருவாவதற்கு ஆக்கபூர்வ மாக பங்களிப்பது வேறு.

இத்தகைய சக்திகள் தமிழக மக்களினதும் இந்திய அஹிம்சை மரபுகளையும் இழிவுபடுத்துகிறார்கள். இந்திய மத்திய மாநில அரசுகள் இவற்றின் மீது தயவு தாட்சணியமற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்திய தமிழக சமூக ஆர்வலர்களும் இதனை பொறுத்துக் கொள்ளமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

# பாக்குவகைகளை தடைசெய்ய பிரேரணை சமர்ப்பிக்க ஏற்பாடு

(கொழும்பு)

பாபூல், பீடா, பான்பராக் போன்ற பாக்கு வகைகளை இறக்குமதி செய்தல், விநியோகித்தல் மற்றும் உட்கொள்ளல் என்பவற்றை தடைசெய்யும் பிரேரணை ஒன்றை அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு விற்பனை செய்யப்படுகின்ற இந்தப் பாக்குவகைகள் வாய்ப்புற்றுநோய் பரவுவதற்கு காரணமாக அமைந்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச வாய் சுகாதார தினம் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு களுத்துறை தேசிய சுகாதார கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற தேசிய வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

வாய்ப்புற்றுநோய்க் காரணிகளில் ஒன்றான இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற மாவா என்ற பெயரிலான ஒருவகை போதை இரசாயனக் கலவை அடங்கிய பாக்கு கொழும்பிலுள்ள பாடசாலைகளுக்கு அருகில் விற்பனை செய்யப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# அரச உத்தியோகத்தர்களின் ஓய்வு வயது 60ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை 60 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

இவ்வறிவித்தலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதாகவும் இதற்கிணங்க இதுவரை 57 வயதாக நிர்ணயிக்கப்பட்டிருந்த ஓய்வுபெறும் வயதெல்லை 60 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதற்கிணங்க அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் 55 வயதுக்குப் பின் 60 வயது வரை இனி ஒவ்வொரு வருடமும் காலத்தை நீடிப்பதற்காக விண்ணப்பிக்க வேண்டியதில்லை. அவர் 60 வயது வரை சேவையைத் தொடர முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே 55 வயதாகவிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை தொழில் சங்கங்களின் வேண்டுகோளுக்கு இணங்க 57 வயதாக அதிகரிக்கப்பட்டது.

தற்போது 60 வயதாக இவ் வயதெல்லை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் 60 வயதுவரை மட்டுமே இந்நீடிப்பு நடைமுறையிலிருக்குமென்றும் 60இற்கு மேல் எவருக்கும் கால நீடிப்பு வழங்கப்படமாட்டாது என்ற உறுதியான நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் 55 வயதில் ஓய்வு பெற முடியும்.

அவர் விரும்பும் பட்சத்தில் மூன்று மாதகால முன்னறிவித்தலை வழங்கி அவர் 60 வயதுவரை சேவையில் நீடிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை - இந்திய எண்ணெய்க்கம்பனிக்கு களஞ்சிய வசதி மறுக்கப்படுமா?

(கொழும்பு)

இலங்கை, இந்திய எண்ணெய்க் கம்பனி திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்திலுள்ள களஞ்சியப்படுத்தும் வசதியை பயன்படுத்துவதை நிறுத்துவது பற்றி அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்துவருவதாக சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை, இந்திய எண்ணெய்க கம்பனி சட்ட வலுவுள்ள ஒப்பந்தம் ஏதுமின்றி இந்த வசதியை பயன்படுத்துவதே இதற்குக்காரணமெனவும் அவ்வதிகாரி கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் பதவியிலிருந்தபோது இலங்கை, இந்திய எண்ணெய்க் கம்பனி இலங்கை எண்ணெய் விநியோகச் சந்தையில் நுழைந்தபோது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சீனன் குடாவிலுள்ள எண்ணெய் தாங்கிகள் சிலவற்றை இலங்கை, இந்திய எண்ணெய்க் கம்பனி பயன்படுத்த அனுமதித்தது. ஆனால் அப்போது ஒழுங்கு முறையான ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப்படவில்லை.

இலங்கை, இந்திய எண்ணெய்க் கம்பனிக்கு இந்த தாங்கிகளை பயன்படுத்த அனுமதி வழங்குவதோடு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அதிகாரம் இல்லையென்பதே இங்கு முக்கிய பிரச்சினையாகவுள்ளது. இந்த எண்ணெய்த் தாங்கி வசதிகளும் அமைந்துள்ள இடமும் அரசாங்கத்துக்குச் சொந்தமானதாகும்.

இந்த தாங்கிகள் தொடர்பில் ஓர் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ள வேண்டுமென இந்தியர்கள் அழுத்தம் கொடுக்கின்றனர். ஆனால் இச்சொத்துக்களின் பெறுமதி இவை அமைந்துள்ள இடத்தின் கேந்திர முக்கியத்துவம் என்பவற்றை கருத்தில் கொள்ளும்போது நாம் மிக எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனிக்கு வழங்கப்பட்ட தாங்கிகளை மீளப்பெறுவது தொடர்பில் ஓர் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளிலிருந்து பிரதீப்மாஸ்டர் உட்படமூவர் நீக்கம்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின்சில்வா கிருஸ்ணானந்தராஜா, கட்சியில் இருந்து நீக்கப்பட்டதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை, கட்சியின் முன்னாள் செயலாளர் எ.கைலேஸ்வரராஜா மற்றும் கட்சியின் உறுப்பினர் எம்.வரதராஜன் ஆகியோரும் ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் கட்சியின் சகல பொறுப்புக்களில் இருந்தும் அடிப்படை அங்கத் துவத்தில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளதாகவும் அக்கட்சி அறிவித்துள்ளது.

மேற்படி மூவரும், கட்சியின் யாப்பு விதிகளை மீறிச் செயற்பட்டார்கள் மற்றும் கட்சியின் அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்தார்கள் போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கட்சியின் பணிக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இருப்பினும் அப்பணிக்குழுவின் முன், தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர்கள் உரிய முறையில் பதிலளிக்கத் தவறினார்கள் என்ற அடிப்படையில் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து அம் மூவரும் நீக்கப்பட்டனர் என்று த.ம.வி.பு கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த காலங்களிலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த உறுப்பினர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து துணிகரமாக நீக்கியுள்ளதாக அக்கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

72) ரிஸ்மியா ஒவ்வொரு சனிக்கிழமையும் தனது அப்பம்மாவை பார்க்கப் போவாள். ரிஸ்மியா முந்தநாள் தன் அப்பம்மாவை பார்க்கப் போயிருந்தால், நாளை மறுதினம் என்ன கிழமை?

.................................................................................

73) ஒரு காற்சட்டையை வெயிலில் உலர்த்த 5 நிமிடங்கள் தேவை எனின், 10 காற்சட்டைகளை உலர்த்த எவ்வளவு நேரம் தேவை?

.................................................................................

.................................................................................

74) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| a) Village | :........................ | f) Jungle | :........................ |
| b) Stones | :........................ | g) Train | :........................ |
| c) Nest | :........................ | h) Carpenter | :........................ |
| d) Mosque | :........................ | i) Rainbow | :........................ |
| e) Net ball | :........................ | j) Spoon | :........................ |

75) பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| a) புதுவ | :........................ | d) தாத்தா | :........................ |
| b) பதுர | :........................ | e) கிரிபத் | :........................ |
| c) சதுபாட்ட | :........................ | f) ரதுபாட்ட | :........................ |

**'மாலைக்காட்சி' என்னும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலையுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.**

01) .................................................................................

02) .................................................................................

03) .................................................................................

04) .................................................................................

05) .................................................................................

06) .................................................................................



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013    பகுதி - II    1 மணி 15 நிமி


# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

தலைப்புக்கேற்ற படத்தைத் தெரிந்து இலக்கத்தை அட்டவணையில் குறிக்க.

01.




| தரைப்போக்கு வரத்துச் சாதனம் | தொடர்பு சாதனம் | விமானப்போக்கு வரத்துச் சாதனம் | துணி உற்பத்தி பொருட்கள் | கடல்போக்கு வரத்துச் சாதனம் | தளபாட உற்பத்திப் பொருட்கள் |
|---|---|---|---|---|---|
| 1) .................. | 3) ........... | 5)................... | 7)................... | 9)................... | 11)................... |
| 2) .................. | 4) ........... | 6)................... | 8)................... | 10)................... | 12)................... |

**பிரசினங்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.**

13. பி.ப. 2.15 இற்குப் பயணத்தை ஆரம்பித்த தில்சான் மீண்டும் வீட்டுக்கு பி.ப. 5.10 இற்கு வந்தான். அவனது பயணத்திற்கு செலவிட்ட காலத்தைக் காண்க.


.................................................................................

14. தொழுவத்தில் இருந்த 14 மாடுகளினதும், 6 ஆடுகளினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.................................................................................

**பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கொழும்பு நகரம் பெரிய நகரம் - கோல அழகு கொண்ட நகரம்
மாடி மனைகள் நிறைந்த நகரம் - மக்கள் பலரும் விரும்பும் நகரம்
காலிமுகக் கடற்கரையும் - கவின் மிகு பல கட்டடங்களும்
தூர நின்று நாம் பார்த்திடவே - துலங்கும் பெரிய துறைமுகமும்
விரிந்த பரந்த வீதிகளும் எழில் - விளங்கும் கோயில் பள்ளி பலவும்
நிறைந்த நகரம் கொழும்பு நகரம் நிகரில்லாத பெரிய நகரம்
இந்து சமுத்திர ஓரத்திலே - மிக இனிதாய் அமைந்த ஒரு நகரம்
வந்து பலரும் பார்த்திடவே - வாஞ்சை கொள்ளும் பெரு நகரம்



15. இப்பாடல் எதைப் பற்றிக் கூறுகின்றது?..................................

16. இப்பாடலில் வரும் கடற்கரையின் பெயர் என்ன?..................................

17. இப்பாடலில் வரும் சமுத்திரத்தின் பெயர் என்ன?..................................

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொற்கள் தருக.**

18. பெரிய .................................. 19. நகரம் ..................................

20. தூர .................................. 21. பரந்த ..................................

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.**

22. அழகு .................................. 23. முகம் ..................................

24. வீதி .................................. 25. வாஞ்சை ..................................

26. கோயில் .................................. 27. பெரிய ..................................

28. கொழும்பு நகரம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது? ..................................

29. இப்பாடலில் வரும் பெயர்ச் சொற்கள் மூன்று எழுதுக.

1) .................. 2) .................. 3) ..................

30. இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ள நாட்டின் பெயர் தருக..................................

**நாடக நிகழ்வுக்காக விற்கப்பட்ட நுழைவுச் சீட்டு தொடர்பான விபரம் தரப்பட்டுள்ளது. அதைக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.**

| வகுப்பு | நுழைவுச் சீட்டு விலை |
|---|---|
| விசேட வகுப்பு | ரூ. 200.00 |
| முதலாம் வகுப்பு | ரூ. 100.00 |
| இரண்டாம் வகுப்பு | ரூ. 50.00 |
| மூன்றாம் வகுப்பு | ரூ. 30.00 |

31. விசேட வகுப்புச் சீட்டுகள் 150 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

..................................

32. முதலாம் வகுப்புச் சீட்டுகள் 100 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

..................................

33. 2 ஆம் வகுப்புச் சீட்டுகள் 200 விற்றிருப்பின் கிடைத்த பணம் எவ்வளவு?

..................................

34. 3 ஆம் வகுப்புச் சீட்டுகள் விற்றுக் கிடைத்த மொத்தத் தொகை ரூ.9000.00 எனில், விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கையைக் காண்க.

..................................


35. சீட்டுகள் விற்றுக் கிடைத்த மொத்தப் பணத்தைக் காண்க.

..................................

36. மொத்தமாக விற்ற சீட்டுகளின் எண்ணிக்கை யாது?

..................................

**தரம் 4 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் உணவின் விபரம் வரைபில் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**




37. மிகக் கூடுதலானோர் விரும்பும் உணவு வகை யாது?

..................................

38. மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவு வகை யாது?

..................................

39. அதிகமானோர் விரும்பும் உணவுக்கும், மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

..................................



40. இடியப்பம் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?

..................................

41. எத்தனை மாணவர்கள் இட்லியை சாப்பிட்டிருக்கின்றனர்?

..................................

42. ஒரு தென்னந்தோட்டத்தில் 1860 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. அத் தேங்காய்கள் 3 லொறிகளில் ஒரே அளவில் ஏற்றப்பட்டன. ஒரு லொறியில் ஏற்றப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

..................................

**தரப்பட்ட சிங்கள வசனங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

43. ஸ்துதிய .................................. 44. ஆயுபோவன் ..................................

**தரப்பட்ட சொல்லுக்கான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

45. ஆசிரியர் .................................. 46. சாரதி ..................................

47. விவசாயி .................................. 48. தாதி ..................................

49. தபாற்காரன் .................................. 50. வைத்தியர் ..................................

**தரப்பட்ட சொற்களைக் கொண்டு இடைவெளிகளை பூரணப்படுத்துக.**

**(காசோலை, பூக்கள், வாகனப்புகை, காலநிலை, அணில், சுத்தமான, நன்னீரில், மண்புழு, வெட்டுக்கிளி)**

51. குழல் ..................................காரணமாகவும் மாசடைகின்றது.

52. எமது தொழிலைப் பாதிப்பதில் வானிலையும், ..................................யும் காரணமாகின்றன.

53. கொடுக்கல், வாங்கலில் ..................................பயன்படுத்தப்படுகின்றது.

54. ..................................விவசாயியின் நண்பன் என அழைக்கப்படுகின்றது.

55. மீன்கள் ..................................மூலம் சுவாசிக்கின்றன.

56. ..................................முட்டையிட்டு இனம் பெருகாத ஒரு பிராணியாகும்.

57. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு ..................................நீரிலேயே முட்டையிடும்.

58. விரால் மீன் ..................................வாழும் மீனினமாகும்.

**பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.**

59. கூ.மொ.வி.நி .................................. 60. இ.போ.ச ..................................

61. கி.பி. .................................. 62. இ.மி.ச. ..................................


63. இ.ரு.கூ. .................................. 64. மு.ப. ..................................

**பகுதி A இல் சில அளவைகள் தரப்பட்டுள்ளன. பகுதி B இல் உள்ள பொருத்தமான நியம அலகைக் கோட்டினால் இணைக்க.**

| | A | B |
|---|---|---|
| 65. | கிலோமீற்றர் | g |
| 66. | லீற்றர் | Km |
| 67. | மீற்றர் | ml |
| 68. | சென்ரி மீற்றர் | m |
| 69. | கிராம் | cm |
| 70. | கிலோகிராம் | l |
| 71. | மில்லிலீற்றர் | kg |

# ஸ்டாலின் வீட்டில் சி.பி.ஐ.சோதனை

# அமைச்சர் சிதம்பரம் கடும் கண்டனம்



தி.மு.க பொருளாளர் ஸ்டாலின் வீட்டில் சி.பி.ஐ அதிகாரிகள் நேற்றுக் காலை 7.00 மணி முதல் காலை 8.00 மணிவரை சோதனை நடத்தினர்.

சென்னை தேனாம்பேட்டையில் இருக்கும் அவரது வீட்டில் சோதனை நடைபெற்றது. அதேபோல், சென்னை திருமூர்த்தி நகரில் இருக்கும் ஸ்டாலினின் நெருங்கிய நண்பர் ராஜசங்கர் வீட்டிலும் சோதனை நடைபெற்றதாக தெரிகிறது.

இந்நிலையில் தி.மு.க பொருளாளர் ஸ்டாலின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனைக்கு மத்திய அமைச்சர் சிதம்பரம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஸ்டாலின் வீட்டில் சி.பி.ஐ அதிகாரிகள் சோதனை நடத்தியிருக்கக்கூடாது, சோதனை நடந்திருப்பதை என்னால் ஏற்க முடியாது எனத் தெரிவித்தார். மேலும சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடம் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.


ஸ்டாலின் மகன் உதயநிதி ஸ்டாலின் வெளிநாட்டில் இருந்து சொகுசு கார் இறக்குமதி செய்ததில் முறைகேடு நடந்திருப்பதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து டில்லியில் இருந்து வந்த சி.பி.ஐ அதிகாரிகள் 6 பேர் கொண்ட அதிகாரி கள் குழுவினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக தெரிகிறது. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹம்மர் காருக்கு முறையான ஆவணம் இருக்கிறதா, சரியான தொகை செலுத்தப்பட்டதா என அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

அரசியல் நோக்கத்துடன் மிரட்டும் வகையில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. எதுவாக இருந்தாலும் சட்டப்படி சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என ஸ்டாலின் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தி.மு.க ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியச் செய்திகள்

# திமுக விலகல் ஐமு கூட்டணியின் பலம் என்ன?




| | |
|---|---|
| மொத்த மக்களவை உறுப்பினர்கள் | 543 |
| ஆட்சி அமைப்பதற்கு தேவையான ஆதரவு | 272 |
| தற்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு ஆதரவு | 285 |

# மும்பை குண்டுவெடிப்பு வழக்கு

# நடிகர் சஞ்சய்க்கு 5வருடசிறை



மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் நடிகர் சஞ்சய்க்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மும்பையில் 1993ஆம் ஆண்டு 12 இடங்களில் தீவிரவாதிகள் நடத்திய குண்டுவெடிப்பில் 257 பேர் கொல்லப்பட்டதுடன் 713 பேர் படுகாயமடைந்தனர்.

ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து பயன்படுத்தப்பட்ட சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்ததில் 28 கோடி ரூபா மதிப்பிலான சொத்துகளும் சேதமடைந்தன.

இந்தக் குண்டுவெடிப்பில் ஈடுபட்டதாக தாவூத் இப்ராஹிம், டைகர் மெமோன், அவனது தம்பி அயூப் மெமோன் ஆகியோர் உட்பட 100 பேர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டனர். இதில் 12 பேர்களுக்கு மரண தண்டனையும், 20 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து தடா நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்டது. விசாரணை முடிவடைந்த நிலையில், நீதிபதிகள் பி.சதாசிவம் மற்றும் சௌகான் தலைமையிலான உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

1993ஆம் ஆண்டு குண்டு வெடிப்பில் முக்கிய குற்றவாளியான யாகுப் மேனனின் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது.

இந்தி திரைப்பட நடிகர் சஞ்சய் தத்திற்கு தடாநீதிமன்றம் வழங்கிய 6 ஆண்டுகள் சிறைத் தண்டனையை 5 வருடங்களாக குறைத்தது. இவர் 18 மாதங்களை சிறையில் கழித்துவிட்டார். இதனால் மீகுதி காலத்தை மட்டும் இவர் சிறையில் கழிப்பார். இவர் 4 வாரகாலத்தில் சரணடைய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மத்திய அரசு தானாகவே

# கவிழும் என்கிறது பா.ஜ.க



ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு எதிராக, நாடாளுமன்றில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தாக்கல் செய்யும் திட்டம் எதுவும் இல்லை மத்திய அரசு, தானாகவே கவிழும், என, பாரதிய ஜனதா துணைத் தலைவர், முக்தர் அப்பாஸ் நக்வி கூறினார்.

இதுகுறித்து, முக்தர் அப்பாஸ் நக்வி கூறியதாவது: மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை, தி.மு.க.வாபஸ் பெற்றுள்ளது. இதன் காரணமாக, மத்திய அரசுக்கு எதிராக, நாடாளுமன்றில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தாக்கல் செய்யும் திட்டம், பா.ஜ.விடம் உள்ளதா என, கேட்கப்படுகிறது.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தாக்கல் செய்யும் திட்டம் எதுவும், பா.ஜ.வுக்கு இல்லை் அதற்கான அவசியமும் இல்லை. மக்களின் நம்பிக்கையை, அரசு இழந்து விட்டது. எனவே, காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசை, யாரும் கவிழ்க்க வேண்டிய அவசியமில்லை தானாகவே கவிழும்.

கூட்டணியில் இல்லாத கட்சிகளிடம், நேரத்துக்கு தகுந்தாற்போல், ஆதரவை பெற்று, ஆட்சியில் நீடிக்கின்றனர்.

இதுபோன்ற ஒரு ஆட்சி நடப்பது, நாட்டின் நலனுக்கு ஏற்றதல்ல. இவ் வாறு, முக்தர் அப்பாஸ் நக்வி கூறினார்.

# சத்தியம் தோற்காது

(எரேமியா 20 : 10 - 13)
(யோவான் 10 : 31 -42)

இன்று நற்செய்தி அறிவிக்கின்றவர்கள் சொகுசிலே வாழ்ந்து கொண்டு நற்செய்தியை அறிவிக்கின்றார்கள். மக்களின் கைதட்டல், பின்பற்றல் அவர்களுக்குத் தாராளமாய் உண்டு. ஊடகப் பிரசாரமும் அவர்களுக்கு உண்டு. போதாக்குறைக்கு கொழுத்த வருமானமும் நற்செய்தி அறிவிப்பால் உண்டு.

ஆனால் எரேமியாவுக்கும் இயேசுவுக்கும் கிடைத்ததோ எதிர்ப்பு, கல்லெறிதல், உயிராபத்து இவைதான் மக்கள் கேட்க விரும்புவதையே பிரசங்கிக்கும் போலி இறைவாக்குரைப்பாளர்களாய் நாமிருக்கும் வரையில் பாராட்டுக்கும் பணவருமானத்திற்கும் எந்தக் குறையும் இருக்காது. நற்செய்தி என்பது சீனி மிட்டாய் வியாபாரம் அல்ல. அந்த நற்செய்தி அறிப்பு எரேமியாவிற்கும் இயேசுவுக்கும் போல் எதிர்ப்பையும் மரணத்தையும் கொண்டு தரலாம். அந்த நற்செய்தி அதிகாரத்தில் இருப்போருக்கும், மக்களுக்கும் கூட எட்டிக்காயாய் கசக்கலாம். உண்மை இறைவாக்கினர் அனைவரும் அனுபவித்தது எதிர்ப்பும் மரணமுமே.

இன்று நற்செய்தியாளர்கள் "அரும் அடையாளம்" செய்தி மக்களைத் தம்பால் ஈர்க்கின்றார்கள். "யோவான் அரும் அடையாளம் எதையும் செய்யவில்லை" அவரின் ஒரே அரும் அடையாளம் அவரின் துணிச்சலான மரணம்தான்.

எரேமியாவும் இயேசுவும் நடந்த பாதையில் நடந்த கடவுளின் வார்த்தையை நாம் நாட்டிலே அறிவிப்போம். சத்தியத்தை அறிவித்தவர்கள் பலியானபோதும் சத்தியம் தோற்கவில்லை.

வி.பி.தனேந்திரா.

சர்வதேச அரசியலின்....
(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

இந்தக் காய்நகர்த்தல்கள் மூலம் ஜெனிவாத் தீர்மான புயல் அதன் நேரடி இலக்கான இலங்கை மீதாக அன்றி இந்தியாவில், குறிப்பாக புதுடில்லியிலேயே மையம் கொண்டிருக்கிறது.

இதன்மூலம், இந்திய மத்திய அரசு இரு முனையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறது. ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தால் உள்நாட்டில் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும். இதற்கஞ்சி தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தால், பிராந்தியத்தில் இலங்கையுடனான உறவு பாதிப்படைந்து இந்தியாவின் பிடி தளர்ந்துபோகும். இதுதான், இந்துசமுத்திரப் பிராந்தியத்தை மையமாகக் கொண்ட தற்போதைய மேற்குலக அரசியல் இராஜதந்திரத்துக்குத் தேவைப்படுவது.

என்ன செய்யலாம்?.

இந்தப் பின்னணியில், ஈழத் தமிழர்கள் ஜெனிவாத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கவேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதானது, ஏற்கனவே உள்நாட்டு அரசாங்கத்துடனும், தென்னிலங்கை சிங்கள மக்களுடனும் நீண்டகாலப் பகைமையை வளர்த்துக் கொள்ள வழிசமைப்பதுடன் நின்றுவிடாமல், இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பின்னர் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளால் தோற்றுவிக்கப்பட்ட இந்திய அரசுடனான பகைநிலையிலும் ஈழத் தமிழர்களைக் கொண்டுவந்துவிடும்.

உள்நாட்டு அரசையும் பகைத்துக்கொண்டு, பக்கத்து நாட்டையும் புறக்கணித்து எங்கிருந்தோ தமக்கு தீர்வொன்று கிடைக்கும் என்று ஈழத்தமிழர்கள் எதிர்பார்த்தால் அது மீண்டுமொரு துயர வரலாற்றையே தமிழர்களுக்குப் பரிசளிக்கும்.

ஆக, இந்தப் பின்னணியில், ஈழத் தமிழர்களை மையமாக வைத்து, ஆனால், அவர்களை ஒரு பகடைக்காயாகவே பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்கும் தமிழக, இந்திய, உலகளாவிய இன்றைய சூழ்நிலையைச் சரியாகப் புரிந்துகொண்டு, அவற்றைத் தமக்குச் சாதகமாக, தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள உதவக்கூடிய ஒரு உத்தியாகப் பயன்படுத்துவதற்கு தமிழர் தரப்புக்கள் முயற்சிக்கவேண்டும்.

எப்படியோ தாம் தொடர்ந்தும் வாழப்போகும் இலங்கைத் தீவின் தேசிய நலன்களையும், அண்டை நாடான இந்தியாவின் பிராந்திய அரசியல் நலன்களையும் அனுசரித்துப்போகும் விதமான காய்நகர்த்தல்களை மேற்கொள்வதன் மூலமே, இத்தகையதொரு தீர்வு சாத்தியமாக முடியும் என்பதை தமிழ் அரசியல் தலைமைகளும், தமிழ் மக்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சிரிய போரை முடிவிற்கு கொண்டுவர
# நேட்டோ விரைவில் தாக்குதல்



(வொஷிங்டன்)

சிரியாவில் இடம்பெற்று வரும் போரை மிக விரைவாக முடிவிற்கு கொண்டுவரும் வகையில் அந்நாட்டின் மீது நேட்டோ தாக்குதலை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக போர் நடைபெற்று வருகிறது. அதிபர் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக புரட்சிப படையினர் ஆயுதம் ஏந்தி போரிட்டு வருகின்றனர். இந்தப் போரில் இதுவரை 70 ஆயிரம் மக்கள் இறந்துள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது. ஒரு மில்லியன் மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே அமெரிக்காவின் உதவியுடன் புரட்சியாளர்கள், இரசாயன ஆயுதங்கள் வைத்து போரிடுவதாக சிரியா குற்றம் சாட்டியது. இதனை அமெரிக்கா மறுத்துள்ளது.


இந்நிலையில் அமெரிக்காவின் இராணுவ அதிகாரிகளும், ஐக்கிய நாடுகளின் தூதரும், சிரியாவில் சூழ்நிலை மிகவும் மோசமடைந்து வருவதாக மதிப்பீடு செய்துள்ளனர்.

எனவே இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர நேட்டோ, சிரியாவின் மீது இராணுவத் தாக்குதல் மேற்கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் தாக்குதல் நடத்துவதற்கு 28 உறுப்பு நாடுகளின் ஒப்புதல் அவசியமாகும்.

இதற்கு முன் ஏற்பாடாக தெற்கு துருக்கியில் சிரியாவின் விமானப் படைகளை தாக்கும் விதமான ஆயுதங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## உலகச் செய்திகள்

# பாகிஸ்தானில் மே 11 இல் தேர்தல்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் மார்ச் 16ஆம் திகதியுடன் முடிவடைந்தது. எனவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து 60 நாட்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், மே 11ஆம் திகதி தேர்தலை நடத்தலாம் என பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் முன்மொழிந்துள்ளார். இந்த அறிக்கையை பெற்றுக்கொண்ட அதிபர் சர்தாரி, மே 11ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார். ஆனால், தேர்தல் அட்டவணையை இன்னும் ஓரிரு நாட்களில் தேர்தல் ஆணையம் முறைப்படி அறிவிக்கும்.

பாகிஸ்தானில் தற்போது நடைபெற்ற மக்களாட்சிதான் தனது முழு பதவிக்காலத்தையும் நிறைவு செய்துள்ளது. பாகிஸ்தான் நிறுவப்பட்ட 1947 முதல் அங்கு பல ஆண்டுகள் இராணுவ ஆட்சிதான் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# பூமியை நெருங்குகிறது விண்கல் எச்சரிக்கும் நாஸா விஞ்ஞானிகள்

(புளோரிடா)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரை நோக்கி வந்து கொண்டிருக்கும் விண்கல்லை எப்படி சமாளிப்பது என்பது குறித்து பிரதிநிதிகள் சபையின் அறிவியல் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாஸா விண்வெளி அமைப்பின் தலைவர் சார்லஸ் போல்டன் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். பின்னர் இதுதொடர்பாக நடந்த விவாதத்தில் பிரதிநிதிகள் மற்றும் விஞ்ஞானிகள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

நியூயோர்க் நகரை நோக்கி வந்துகொண்டிருக்கும் மிகப் பெரிய விண்கல்லை எப்படி சமாளிப்பது என்பது குறித்து ஆலோசிக்க வேண்டும். விண்கல்லை திசைதிருப்ப முயற்சி செய்ய வேண்டும். தேவைப்பட்டால் இதற்காக நீங்கள் பிரார்த்திக்க வேண்டும்.

பூமிக்கு அருகில் சுற்றிக்கொண்டிருக்கும் 95 சதவிகித விண்கற்களை நாசா கண்காணித்து வருகிறது. அதில் ஒரு கிலோ மீட்டர் விட்டமுடைய விண்கற்களும் அடங்கும். இந்த விண்கல்லானது மனித நாகரிகத்தை அழித்துவிடும் அபாயம் இருக்கிறது.

10,000இற்கும் மேற்பட்ட நகரங்களைத்தாக்கி அழிக்கும் விண்கற்களில்,50 மீட்டர் விட்டமுடைய வெறும் 10 சதவிகித விண்கற்கள் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளன. விண்ணிலிருந்து அறிய முடியாத விண்பாறைகள் மற்றும்



விண்கற்கள் பூமியை தாக்குவதை சமாளிப்பது குறித்து முடிவெடுக்கவேண்டியது அனைத்தும் அமெரிக்காவை சார்ந்து இருக்கிறது.

கடந்த பெப்ரவரி மாதம் 17 மீட்டர் விட்டமுடைய விண்பாறை ஒன்று ரஷ்யாவின் செல்யாபின்ஸ்க் என்னுமிடத்தை நோக்கி வந்தது. அந்த விண்பாறையானது ஆகாயத்திலேயே குண்டுகளை வீசி தகர்க்கப்பட்டது. அப்போது அப்பகுதி வீடுகளின் ஜன்னல்கள் உடைந்து சேதமடைந்தன. இதில் 1500இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்.

அதன் பிறகு மிகப்பெரிய விண்கல் ஒன்று சமீபத்தில் பூமியிலிருந்து 17,200 மைல் தூரத்திற்கு அப்பால் வந்து சென்றதை நமது விண்கலங்கள் படமெடுத்தன.

பூமியை தாக்கும் விண்கற்களை திசைதிருப்புவது சம்பந்தமாக தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது குறித்து பன்னாட்டு ஒத்துழைப்பை நாஸா எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறது.

எனபிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# அமெரிக்க ஜனாதிபதிக்கு இஸ்ரேலில் செங்கம்பள வரவேற்பு



(ஜெருசலேம்)

அமெரிக்க அதிபராக 2ஆவது முறையாக பொறுப்பேற்ற ஒபாமா, முதல் முறையாக இஸ்ரேலுக்கு 3 நாள் அரசு முறைப்பயணம் மேற்கொண்டுள்ளார். மிக நெருங்கிய நட்பு நாடான இஸ்ரேலுக்கு சென்ற அவருக்கு ஜெருசலேமில் சிவப்புக் 'கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது அங்கு கூடியிருந்த மக்களிடையே அவர் பேசும் போது, 'உலகில் உள்ள அனைவரும் சுதந்திரமாக செயற்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ள நாம் இருவரும் இணைந்து நிற்போம்' என்று கூறினார்.

ஈரானின் அணுசக்தி உற்பத்தி மற்றும் சிரியாவின் உள்நாட்டுப் போர் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் இந்த நேரத்தில், ஒபாமாவின் இஸ்ரேல் வருகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. மேலும் அவர், இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மேற்குக்கரை மற்றும் ஜோர்டான் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்

# பிரேசில் நிலச்சரிவில் 27பேர் உயிரிழப்பு


பிரேசில் ரியோ டி ஜெனிரோவின் வடக்கு மலைப் பகுதியில் நேற்று முன்தினம் முழுவதும் பெய்த இடைவிடா மழையினால் அங்கு கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலச்சரிவினால் 50 வீடுகள் முழுமையாக இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் குறைந்தது 27 பேர் பலியாகியுள்ளனர். இதனைத் தொடர்ந்து மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடத்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக ஊடகத் தகவல் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த கடும் மழையினால் ஆற்றின் கரைகள் உடைந்து பெட்ரோபொலிஸ் நகரின் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

இது போன்று கடந்த 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 900 பேர் பலியாயினர் என்பது குறிப்பிடத்தக்கது

# தென்கொரிய கணனிகள் செயலிழப்பு சீனா காரணமென குற்றச்சாட்டு



(சியோல்)

தென்கொரிய கணனிகள் செயல் இழந்தமைக்கு சீனாவே காரணமென குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் தென்கொரியாவின் முக்கிய 5 வங்கிகள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களின் கணிப்பொறிகள் ஒரே நேரத்தில் செயல் இழந்தன. இணையத்தளம் மூலம் வைரஸ் தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் இந்த செயலிழப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன் கடந்த திங்கட்கிழமை, வடகொரியாவின் தலைநகர் பியாங்யாங் நகரில் இணையத்தளம் செயல் இழந்தது. தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்தே இந்த செயலை செய்ததாக வடகொரியா குற்றம்சாட்டியது.

அதனால் எதிர் நடவடிக்கையாக இந்த இணையத்தள தாக்குதலை வடகொரியா நடத்தி இருக்கலாம் என்று தென் கொரியாவுக்கு சந்தேகம் எழுந்தது.

ஆனால் நேற்று நடத்தப்பட்ட முதல்கட்ட விசாரணையில் இந்த தாக்குதலை நடத்திய கணிப்பொறிகளின் முகவரிகள் சீனாவில் உள்ளதாக தெரியவந்துள்ளது. கணிப்பொறிகளின் முகவரிகளும் போலியாக பயன்படுத்தப்படுவதால், உடனடியாக சீனா மீது குற்றம்சாட்டிவிட இயலாது என்றும் கூறப்படுகிறது.

இந்த தாக்குதலில் இருந்து கணிப்பொறிகள் சரியாக 4 அல்லது 5 நாட்கள் ஆகும். மேலும் கணிப்பொறிகளை பாதுகாக்க, தென்கொரிய தொலைத்தொடர்பு ஒழுங்கு ஆணையம் புதிய பாதுகாப்பு மென்பொருட்களை நிறுவனங்களுக்கு வழங்கிவருகிறது.

# நில நடுக்கத்தின் எதிரொலி தங்கமாக மாற்றமடையும் நீர்



நியூசிலாந்தில் நிலநடுக்கத்தால், பூமிக்கு அடியில் இருக்கும் நீர், தங்கமாக மாறுவதாக, ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியாவின், குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் சார்பில், பூமியில், நிலநடுக்கத்தால் ஏற்படும் மாற்றங்கள் குறித்து, ஆய்வு செய்யப்பட்டது. ஒவ்வொரு முறை நிலநடுக்கம் ஏற்படும் போதும், நீர் மூலக்கூறுகள் தங்கமாக மாற்றமடைவதாக, இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது. மேலும், இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிலநடுக்கத்தால், பூமியின் அடிப்பகுதியில் உள்ள நீர், அதிக அழுத்தத்திற்கு உட்படுகிறது. இதனால், நீர் மூலக்கூறுகள், வேதியியல் மாற்றத்திற்கு உள்ளாகின்றன. இந்த மாற்றம், பூமியின் மத்திய பகுதியில் நிலவும் அதிக வெப்பத்தின் காரணமாக, மேலும் சில கனிமங்களுடன் வேதிச்சேர்கையில் ஈடுபடுகின்றன. இதனால், பல மாற்றங்களுக்கு பின் நீரானது, தங்கமாக மாறுகிறது. சாதாரணமாக, இந்நிகழ்வு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு பின் நடைபெறுகிறது. ஆனால், நியூசிலாந்தில் நிலவும் சாதகமான, தட்ப .வெட்ப நிலையின் காரணமாக, வெகு விரைவிலேயே இந்த மாற்றம் நிகழ்கிறது. சில நூறு ஆண்டுகளுக்கு பின், நியூசிலாந்தில், ஏராளமான தங்கச் சுரங்கங்கள் உருவாவதற்கான வாய்ப்புகள் உள்ளன. என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்விச்சாலைகளில் விஞ்ஞானகூடம் கல்வி அபிவிருத்தியில் மைல்கல்

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு உதவும் வகையில் இரு பாடசாலைகளில விஞ்ஞான ஆய்வு கூடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இத் திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும் போது மாணவர்களின் கல்வியானது எந்த வகையிலும் பாதிகாத வண்ணம் உயரவேண்டுமென ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்திற்கென குறித தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து சுமார் 60 இலட்சம் ரூபாய் செலவில் அமையப்பெற்ற வல்வெட்டித்துறை கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையின் விஞ்ஞான ஆய்வு கூடத்தினை நேற்று முன்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைத்த பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாணவர்களின் கல்வியானது எந்த வகையிலும் பாதிக்காத வண்ணம் உயரவேண்டும். அதற்காக அவர்களுக்கான பாடவிதான செயற்பாடுகளுக்குத் தேவையான அனைத்து வளங்களும் எம்மால் வழங்கப்படும். ஆசிரியர்கள் கல்வியை கற்பிப்பதோடு பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் கல்விக்கான பாடங்களின் அடைவு மட்டங்களை கவனித்து வருவதுடன் அவர்கள் வீட்டில் கல்வி கற்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக அதிபரால் முன்வைக்கப்பட்ட பல்லூடக தெறிகருவி மிக விரைவில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தினூடாக வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கரவெட்டி கரணவாய் மகாவித்தியாலயத்தில் வடமாகாணத்திற்கென குறித் தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் அமையப்பெற்ற விஞ்ஞான ஆய்வு கூடத்தினையும் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் நேற்று முன்தினம் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுகளில் வடமராட்சிப் பிரதேச செயலர் ஜெயசீலன், வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர சிவபாதம் நந்தகுமார், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் உட்பட துறைசார்ந்த பலரும கலந்துகொண்டனர்.

## நலிவடையும் ப.நோ.கூ.சங்கங்கள் மேம்படுத்த நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் உள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 20 சங்கங்கள் இலாபத்தில் இயங்குவதாகவும், 4 சங்கங்கள் நஷ்டத்தில் நடைபெற்று வருவதாகவும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வீ.கே.அருன்தவநாதன் தெரிவித்துள்ளார்.

மருதங்கேணி, காரைநகர், வேலணை, சுன்னாகம் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே நஷ்டத்தில் நடைபெறுவதாகும். இவற்றில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாரிய நஷ்டத்தில் இயங்கி வருகின்றது. இச் சங்கங்களுடன அடிக்கடி பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு இவற்றை இலாபத்தில் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர மேலும் குறிப்பிட்டார்.

நல்லூர், யாழ்ப்பாணம், நெடுந்தீவு, வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டு அவை சிறந்த முறையில் இயங்கிவருகின்றன.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னைய நிர்வாகத்தின் மீது விசாரணைகள் நடைபெற்றுவரும் அதேவேளை நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் நிர்வாகத்தின் மீது நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது என உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (137)

### வடக்கில்...

கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம் (NELSIP) 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டுவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக செலவழிக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதைக்கூற முடியுமா என்றும், மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தாலும் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்ட சில பிரேரணைகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது பற்றி தெரியுமா என்றும் கூட்டமைப்பு எம்.பி. ஈ.சரவணபவன் கேள்வி கேட்டிருந்தார்.

இதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் நாடாளுமன்றில் பதில் வழங்கியபோது,

கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன. அதன் பிரகாரம் கருத்திட்டத்தின் செலவு அவ்வவ் மாகாணங்களுக்கு ஏற்ப பின்வருமாறு காட்டப்படுள்ளன.

முழுக்கருத்திட்ட கால எல்லைக்காக ஒதுக்கப்பட்ட தொகை 8308.14 மில்லியன் ரூபாய், 2012 ஆம் ஆண்டாகும்போது மொத்தத் தொகை 3060.10 மில்லியன் ரூபாய், முழுக் கருத்திட்ட கால எல்லைக்காக ஒதுக்கப்பட்ட தொகையின் தற்போதைய செலவு 33.36 வீதம், 2011 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 2493.00 ரூபாய், செலவிடப்பட்ட தொகை 222.53 ரூபாய், 2012 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 3739.00 மில்லியன் ரூபாய், செலவிடப்பட்ட தொகை 2636.47 மில்லியன் ரூபாய்.

மாவட்டத் தலைவர்களால் பிரேரணைகள் மாற்றப்படவில்லை. இந்தக் கருத்திட்டத்தின் திட்டமிடலுக்கேற்ப உப கருத்திட்டத்தைத் தெரிவு செய்யப்படும் செயன்முறை பின்வருமாறு அமையும்.

இந்தக் கருத்திட்டத்தின் திட்டமிடலுக்கேற்ப உப கருத்திட்டத்தைத் தெரிவுசெய்யப்படும் செயன்முறை பின்வருமாறு அமையும்.

0. உள்ளூராட்சி நிறுவனங்களின் பங்கேற்புடன் கூடிய அபிவிருத்தித்திட்டத்தை உள்ளடக்கிய கருத்திட்டமாதல்.
0. பிரதேச அபிவிருத்திக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.
0. மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அங்கீகாரத்தைப் பெறறுக்கொள்ளல்.
0. மாகாண திட்டமிடல் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.
0. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள கருத்திட்ட ஒருங்கிணைப்பு அலகின் உடனபாட்டைப் பெற்றுக்கொள்ளல் என்றவாறே திட்டங்களின் தெரிவுமுறை அமையும்.

உள்ளூராட்சி நிறுவனங்களில் பங்கேற்புடன் அபிவிருத்தித் திட்டம் முக்கியத்துவம் அடிப்படையில் கருத்திட்டம் தெரிவுசெய்யப்படும் என்றாலும், சில உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் முக்கியத்துவம் குறைந்துள்ள கட்டடங்களை அமைப்பது பற்றிய பிரேரணை முன்வைக்கப்பட்ட போதிலும், அரசாங்கம் வேறு கருத்திட்டங்களின் மூலம் தேவையான கட்டடங்களை அமைக்கின்றன. அதன் பிரகாரம் பொதுமக்களின் தேவைக்கேற்பவும் அவர்களின் முன்மொழிவுக்கு ஏற்ப உள்ளூராட்சி நிறுவனங்களின் பங்கேற்புடன் அபிவிருத்தித் திட்டமிடலின் முன்னுரிமைப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்தப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டிற்கான வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களிலும் 79 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளன, அவற்றிற்கான கருத்திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஒதுக்கப்பட்டுள்ள நிதி, செலவு செய்யப்படாமையின் காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்குகளில் தேவையற்றவாறு பணம் வைப்பிலிடுவதை தடுக்கும் முகமாக நிதி அமைச்சின் ஆலோசனைக்கிணங்க தேவையின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரினால் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவர்களால் திட்டமுன்மொழிவுகள் எதுவும் நீக்கம் செய்யப்படவோ அல்லது மாற்றம் செய்யப்படவோ இல்லை என்றும் பொருளாதார அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

### இருதய...

யவுள்ள இந்த இருதய சிகிச்சைப் பிரிவு விரைவில் ஆரம்பிக்கப்படுவதற்கு கொழும்பில் சுகாதார அமைச்சில் பல்வேறு ஒப்புதல்களில் தாம் கையெழுத்திட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், விரைவில் இந்தப் பிரிவு செயற்பட ஆரம்பிக்கும் என்றும் தெரிவித்தார். (பா)

### சவால்களைச்...

எந்தவொரு அழுத்தத்தையும் எதிர்நோக்கக் கூடிய புரிந்துணர்வு அரசாங்கத்திடம் காணப்படுகின்றது. நாட்டுக்கு வெளியே உள்ளோரின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஆட்சி நடாத்த அரசாங்கம்

தயாரில்லை. உள்நாட்டு அரசியல் அழுத்தங்களின் காரணமாக இந்திய மத்திய அரசாங்கம் சில தீர்மானங்களை எடுக்க நேரிட்டுள்ளது.

எவ்வாறெனினும் சவால்களையும் அழுத்தங்களையும் எதிர்கொள்ள அரசாங்கம் ஆயத்தமாகவே இருக்கின்றது என கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

### தோற்றுப்போனவர்கள்...

தோழர்கள் சிந்திய இரத்தமும், எமது கட்சியுடன் இணைந்து நீங்கள் சிந்திய வியர்வையும், உழைப்பும் எமது மக்களுக்கான புனித இலட்சிய பயணத்திற்கு உரம் கொடுத்திருக்கின்றன. இனியும் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் எம் முன்னால் விரிந்து கிடக்கின்றன. சுமக்கும் பாரம் அதிகம், ஆயினும் இனி நடக்கும் தூரம் அதிகமில்லை. எமது கட்சியை மேலும் பலப்படுத்த வேண்டும், நாம் வகுத்த பாதையை இன்னமும் செப்பனிட்டு, சீரமைத்துச் செல்லவேண்டும். அதற்காக கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தி எமது தீர்மானங்களுக்கு மேலும் நாம் உரம் கொடுக்கவேண்டும். ஆகவே, எதிர்வரும் மே மாதம் எமது கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தவேண்டும் என நாம் விரும்புகின்றோம். கட்சியின் தேசிய மாநாட்டிற்கு உடன் தயாராகுங்கள். இது தமிழ் பேசும் மக்களின் இலட்சிய மாநாடு என்பதை பிரகடனமாக பிறப்பிக்க நாம் எழுவோம்! நாம் மக்களுடன் இருக்கின்றோம், மக்கள் எம் பக்கம் இருக்கிறார்கள். என்றும் நாம் மக்களுக்காகவே. இறுதி வெற்றி எமது மக்களுக்கே!

தோழமையுடன்
டக்ளஸ் தேவானந்தா
செயலாளர் நாயகம்
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

### நிறைவேறியது...

பேரவையின் அமர்வில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு 24 நாடுகள் ஆதரவாகவும் 15 நாடுகள் எதிராகவும் வாக்களித்திருந்தன. அத்துடன் அந்த வாக்களிப்பில் எட்டு நாடுகள் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பிரேரணைக்கு எதிராக**

கொங்கோ, மரூடினியா, உகண்டா, இந்தோனேஷியா, குவைத், மாலைதீவு, பாகிஸ்தான், கட்டார், தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஈக்குவோடோரா, வெனிசுவேலா, தாய்லாந்து ஆகிய நாடுகளும்.

**பிரேரணைக்கு ஆதரவாக**

பெனின், கோட்டி டிவோரி, லிபியா, சியரா லியோன், இந்தியா, கொரியா, ஆஜர்ன்டினா, பிரேசில், சிலி, கொஸ்டாரிகா, கௌத்தமாலா, பெரூ, அஸ்திரியா, ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், சுவிஸ்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, செக் குடியரசு, எஸ்டோனியா, மொன்டிகோரே, போலாந்து, மொல்டோவோ குடியரசு, ரொமேனியா ஆகிய நாடுகளும் வாக்களித்தன.

அங்கோலா, கென்னியா, கஷகஸ்தான், ஜப்பான், மலேசியா, பொட்ஸ்வானா, பேர்கின் பாஸோ, எத்தியோப்பியா ஆகிய நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்செயல்கள் தொடர்பில் அனைத்து நாடுகளும் ஏற்கக்கூடிய சுதந்திரமான நம்பகமான விசாரணை அவசியம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேற்படி தீர்மானம் தொடர்பாக இந்தியா கொண்டுவந்துள்ள திருத்தத்தில் இலங்கைக்கு எதிராக சுயேச்சையான, சுதந்திரமான விசாரணை தேவை. இந்த விசாரணையில் சர்வதேச சமுதாயத்தையும் பங்கெடுக்க வகை செய்யவேண்டும் என்றும்

அத்துடன், இலங்கையில் தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படல் வேண்டும், அனைத்து சமூகங்களும் ஏற்கக்கூடிய தீர்வு முன்வைக்கப்படல் வேண்டும், மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை சென்று உண்மை நிலைமையை கண்டறிய வேண்டும். அனைத்து மக்களும் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வு காண இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளையும் இந்தியா தனது திருத்தத்தில் உள்ளடக்கியுள்ளது. இந்த திருத்தங்களையும் தீர்மானத்துடன் இணைத்துக்கொள்ள அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

### பணிக்கு...

அமைச்சிற்கு எழுத்துமூலமாக அறிவித்துவிட்டு சுகவீன் விடுப்பில் இருந்துவந்த அவரை சுகாதார அமைச்சு வைத்தியசாலையின் நாளாந்த நடவடிக்கைகளைக் கருத்தில்கொண்டு உடனடியாகக் கடமைக்கு சமூகமளிக்குமாறு கோரியிருந்ததாகவும் இதற்கு இணங்கவே தாம் கடமைக்கு சமுகமளித்துள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் சிறி பவானந்தராசா தெரிவித்துள்ளார். (பா)

# தங்காலைப் படுகொலை; பிரி. நாடாளுமன்றில் விவாதம்

இலங்கை நிலைமைகள் குறித்து பிரித்தானிய நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2011 ஆம் ஆண்டு தங்காலையில் பிரித்தானிய பிரஜை குர்ஹாம் சாக்கீ கொலை விசாரணை தொடர்பிலும் விவாதிக்கப்பட்டுள்ளது. குர்ஹாம் சாக்கீ கொலை விசாரணைகளை கண்காணிக்கும் நோக்கில் அண்மையில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிமோன் டான்சூக் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இந்த விஜயத்தின் போது திரட்டப்பட்ட த்கவல்களை அவர் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.


இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ள நிலையில், நாட்டின் நீதிமன்றப் பொறிமுறைமை தொடர்பில் சர்வதேச கவனம் திரும்பியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய விமான சேவையொன்று இலங்கையை முதல்தர சுற்றுலா நாடாக பிரகடனம் செய்துள்ளதாகவும், சுற்றுலாப் பயணிகள் எதிர்நோக்க நேரிடும் ஆபத்துக்கள் குறித்து தெளிவுபடுத்தப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை சுற்றுலாத்துறையில் சீனா பாரியளவில் முதலீடு செய்துள்ளமை நாம் அனைவரும் அறிந்ததே என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், வெறுமனே ஹோட்டல்கள் மற்றும் உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் மட்டும் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ஜனநாயக பெறுமதிகள், மனித உரிமை விழுமியங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். தற்போதைய இலங்கை ஆட்சியாளர்கள் பொதுநலவாய நாடுகள் கொள்கைககள் கோட்பாடுகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மயிலியப்புலம் கிராமத்திற்கு மீண்டும் குடிநீர் வழங்கல்



அராலி வடக்கு மயிலியப்புலம் வாழ் மக்களுக்கான குடிநீர் வழங்கல் திட்டம் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இயங்காத நிலையிலிருந்த நீர் வழங்கல் இணைப்பை திருத்திக் கொடுத்ததுடன் புதிய இணைப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் அமைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) தனது சுய முயற்சியினால் இந்த நடவடிக்கையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் செல்வக்குமார், சனசமூக நிலையத் தலைவர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# இலங்கை - சீனா விண்வெளித் திட்டம்; உன்னிப்பாக கவனிக்கிறது இந்தியா

இலங்கை சீனாவுடன் இணைந்து ஆரம்பிக்கவுள்ள விண்வெளித் திட்டம் தொடர்பில் இந்தியா உன்னிப்பாக கவனம் செலுத்திவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆலோசிப்பதற்காக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு பேரவை அடுத்த வாரம் அமைச்சுக்களுக்கு இடையிலான ஆலோசனை கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதாக த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் இந்திய நிறுவனத்துடன் தொடர்பாடல் செய்மதியொன்றை விண்ணுக்கு ஏவுவதற்கு இலங்கையின் நிறுவனம் ஒன்று திட்டமிட்டுள்ளமை குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

சீனாவுடன் இணைந்து இலங்கை விண்வெளி பிராந்தியத்தை பயன்படுத்துகின்றமை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என இந்தியாவின் தேசிய பாதுகாப்புப் பேரவை அறிவித்துள்ளது.

இந்த விடயத்தை கருத்திற்கொண்டு இலங்கைக்காக செய்மதிகளை நிர்மாணிக்கவும் விண்ணுக்கு ஏவவும் இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியாவின் விண்வெளி ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

# இந்திய இராணுவ சீருடையில் புலிகள் பொன்சேகா பரபரப்புத் தகவல்



(கொழும்பு)

இறுதி யுத்தத்தில் புலிகள் இந்திய இராணுவ சீருடையில் இருந்தனர் என சரத் பொன்சேகா புதிய தகவல் வெளியிட்டுள்ளார்.

வன்னியில் நடைபெற்ற போர் தொடர்பான விசாரணைக்கு அரசாங்கம் உத்தரவிடவில்லை என்றால் மேலும் பல சர்வதேச குற்றச்சாட்டுகளை இலங்கை அரசு எதிர்கொள்ள நேரிடும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாலச்சந்திரன் மரணம் தொடர்பிலாக வெளிவந்த புகைப்படம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து இந்தியாவிலிருந்து வெளியாகும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இறுதிக்கட்ட யுத்தத்தில் புலிகள் இந்திய இராணுவ சீருடையுடன் இருந்தனர். பாலசந்திரன் சுட்டுக் கொல்லப்படும் முன்பு எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் புகைப்படத்தில் இராணுத்தினர் ஒருவர் சீருடையில் இருப்பது போன்று காட்டப்பட்டுள்ளது. அது இலங்கை இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும் சீருடை அல்ல.

இந்திய இராணுவத்தினர் அணிவது போன்று உள்ளது. புலிகள்தான் இறுதிக் கட்ட போரின் போது இந்திய இராணுவத்தினர் போல் உடையணிந்திருந்தனர். மேலும், பதுங்கு குழி ஒன்றில் பாலசந்திரன் அமர்ந்து இருப்பது போலவும் புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தினரிடம் அதுபோன்ற சுத்தமான பதுங்கு குழிகள் கிடையாது.

எனவே அது புலிகளின் பதுங்கு குழியாகத்தான் இருக்க வேண்டும். எனவே பாலச்சந்திரன் கடைசிக் கட்டத்தில் புலிகள் இயக்கத்தினருடன்தான் இருந்துள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டதாகக் காட்டப்படும் புகைப்படம் மாற்றம் செய்யப்பட்டு தயாரிக்கப் பட்டதாக இருக்க வேண்டும். புலிகளுக்கு எதிரான இறுதிப் போருக்கு தலைமை வகித்த தளபதி என்ற முறையில் எந்த விதமான சர்வதேச விசாரணையையும் எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

எனவே போரில் என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள மக்கள் விரும்புகிறார்கள். பலர் தங்கள் சந்தேகங்களை போக்கிக் கொள்ள விரும்புகின்றனர். போர் நிகழ்வுகள் தொடர்பான விசாரணைக்கு இலங்கை அரசு உத்தரவிடவில்லை ஏன்றால் மேலும் பல சர்வதேச குற்றச்சாட்டுகளை இலங்கை அரசு எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடக்கின் நிலைவர அறிக்கை கனேடிய அரசு ஆராயும்

இலங்கையின் வடபகுதியின் தற்போதைய நிலைவரங்கள் தொடரபான அறிக்கை ஒன்றை கனேடிய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவிருப் பதாக, இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பொதுநலவாய நாடுகளுக்கான கனேடியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

கனேடியத் தூதுவர் ஹியுஜ் சாவேஜ் வடக்கிலங்கைக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அவர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், தாம் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலான அறிக்கை ஒன்றை தயாரித்து, கனேடிய அரசாங்கத்திடம் கையளிக்கவிருப்பதாக தெரிவித்தார். இதன் அடிப்படையில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பில் கனடா தீர்மானிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்கத் தீர்மானத்தை வலுவாக்க இந்திய அரசாங்கம் தவறிவிட்டது

## - தி.மு.க. குற்றச்சாட்டு -

(சென்னை)

மனித உரிமை பேரவையில் அமெரிக்கா தாக்கல் செய்த இலங்கைக்கு எதிரான தீர்மானம் நீர்த்துப்போய் விட்டது. அதை வலுவாக்க இந்திய அரசு தவறிவிட்டது. அதில் தோல்வி அடைந்து விட்டது என தி.மு.க. கருத்து தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது. இருப்பினும் இந்தியாவும், இலங்கையும் இந்தத் தீர்மானத்தை எவ்வளவு நீர்த்துப் போகச்செய்ய முடியுமோ அவ்வளவுக்கு நீர்ததுப் போக செய்துவிட்டன.

இந்தத் தீர்மானத்தை வலுவாக்க வேண்டும் என்று தமிழக கட்சிகள் கோரி வந்தன. மாணவர்களும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வந்தனர். தி.மு.க.வும் இதுதொடர்பாக மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்தி வந்தது.

இலங்கைக்கு எதிரான கடுமையான வாசகங்களுடன் கூடியதாக இந்த தீர்மானத்தை மாற்ற வேண்டும். இலங்கை அரசும், அதன் இராணுவமும் நடத்திய இனப்படுகொலை குறித்து அதில் இடம்பெற வேண்டும். சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இதுதொடர்பாக அமெரிக்காவை வலியுறுத்தி இவற்றைச் செய்ய வேண்டும் என்று தி.மு.க. கோரி வந்தது. ஆனால் இது எதையுமே மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை.

இந்த திருத்தங்கள் எதையும் அது மேற்கொள்ள முயலவும் இல்லை. கடைசியில் நீர்த்துப் போன நிலையிலேயே இந்தத் தீர்மானம் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை காரணமாகத்தான் மத்திய அரசுக்குக் கொடுத்து வந்த ஆதரவையும் தி.மு.க. வாபஸ் பெற்றது என்பது நினைவிருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். நகரில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் சேவைகளைப் பாராட்டி யாழ். நகரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. யாழ். கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி உள்ளிட்ட பல வீதிகளில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஒரே நாடு ஒரே இனம் எனும் தொனிப்பொருளிலான இந்த சுவரொட்டிகளில் இராணுவத்தினர் யுத்தத்தின் பின்னர் பொதுமக்களுக்கு செய்த சேவைகள் மற்றும் உதவிகளை பாராட்டும் வகையிலான புகைப்படங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன், இலங்கை இராணுவம் உங்களின் எதிர்கால விடியலுக்காக எனும் வசனமும் இந்த சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குற்றத் தடுப்பு பிரிவினர் அசாத் சாலி மீது விசாரணை

(கொழும்பு)

தமிழ் முஸ்லிம் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அஸாத் சாலியின் இல்லம் பொலிஸாரினால் நேற்றுப் பிற்பகல் சோதனையிடப்பட்டது. கொழும்பு - 07 பிளவர் வீதியிலுள்ள அஸாத் சாலியின் இல்லமே பொலிஸாரினால் சோதனையிடப்பட்டுள்ளது.

அஸாத் சாலியை தெமடகொடையிலுள்ள கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவுக்கு இன்று காலை 11.00 மணிக்கு சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு - 07 பான்ஸ் பிளேஸிலுள்ள அலுவலகத்திற்கும் இரண்டு வாகனங்களில் பொலிஸார் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் குறித்த அலுவலகம் மூடப்பட்டிருந்தமையினால், பொலிஸார் அவரின் இல்லத்திற்கு சென்றுள்ளனர்.

குறித்த வீட்டை சோதனையிட்ட பொலிஸார் அங்கிருந்து சில ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பிரசார நடவடிக்கையின்போது வாழைச்சேனை ஜும்ஆ பள்ளிவாசலில் மோதல் ஏற்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக கடந்த வாரம் அஸாத் சாலியை கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.